Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 30 ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 15 (13.04.2006) வியாழக்கிழமை இதழ் 195

யாழ் நகரில்
முகூர்த்த பட்டுப் பிடவைகளின்
கைராசி நிறுவனம்

☼ கோலம் பட்டு
☼ ஆபூர்வா
☼ ரோஜா
இதரரக பட்டு வேட்டிகளுக்கு நாடுங்கள்
சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 222 2063

# திருமலையில் இனக்கலவரம்!

## 10 தமிழர்கள் உட்பட 15 பேர் பலி!

### நூற்றுக்கு மேற்பட்டோர் காயம்! வீடுகள், கடைகள் எரிப்பு



எரிக்கப்பட்ட தமிழர் கடைகள்

திருகோணமலை

திருகோணமலை நகரில் நேற்று மாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து தமிழர்களுக்கு எதிராக சிங்களக் காடையர்கள் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டனர்.

இதன்போது பத்துத் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் 50 பேர் படுகாயமடைந்தனர். மேலும் நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் காயப்படுத்தப்பட்டதுடன் பெருமளவு வீடுகள், கடைகள், வாக

(12 ஆம் பக்கம் பார்க்க)



நடு வீதியில் பிணமாகக் கிடக்கும் பெண்

## சுன்னாகத்தில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்

சுன்னாகத்தில் ஓட்டோ சாரதி ஒருவர் நேற்றுக்காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுன்னாகம் - மின்சார நிலைய வீதியைச்

## இன்றைய செய்தியாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் முக்கிய முடிவு

கிளிநொச்சி

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் முக்கி

தலைவர் உல்ப் ஹென்றிக்சனுடனான சந்திப்பை அடுத்தே இந்தச் செய்தியாளர் மாநாடு நடைபெறும்.

## திருமலையில் ஊரடங்கு அமுல்

திருகோணமலை

திருகோணமலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை அடுத்து நேற்று மாலை முதல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

சிங்கள காடையர்கள் தமிழ் மக்கள் மீது

சுன்னாகத்தில் ஓட்டோ சாரதி ஒருவர் நேற்றுக்காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுன்னாகம் - மின்சார நிலைய வீதியைச் சேர்ந்த செல்லத்துரை கஜேந்திரன் என்பவரே சுட்டுக்கொல்லப்பட்ட வராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது - (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்துறையில் வெட்டிக் கொலை!

யாழ்ப்பாணம் —

ஊர்காவற்துறை - பருத்தியடைப்புப் பகுதியில் உள்ள வீடொன்றில் அடிகாயங்கள் மற் றும் வெட்டுக்காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் ஊர்காவற்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப் படைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் கொலைச் சம்பவத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## 2 இளைஞர்கள் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு நகருக்கருகில் இரு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்களால் கடத்திச்செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர்கள் இருவரது சடலங்கள் கல்லடி வேலூர் மற்றும் இருதயபுரம் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. (12 ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சி —

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாளர் மாநாடு இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சனுடனான சந்திப்பை அடுத்தே இந்தச் செய்தியாளர் மாநாடு நடைபெறும்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தொடர்பான முக்கிய முடிவு அறிவிக்கப்படும் என செய்திகள் தெரிவித்தன.

# குச்சவெளியில் கிளைமோர்; இரு பொலிஸார் உயிரிழப்பு!

திருமலை —

திருகோணமலை - குச்சவெளியில் பொலிஸார் பயணம் செய்த ட்ரக்வண்டி மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில்-இரு பொலிஸார் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்

நேற்றுக்காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

குச்சவெளியிலிருந்து கும்புறுப்பிட்டி நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொலிஸ் ட்ரக் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

செங்கல்குவியல் ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் மீது பழியை போட திட்டமிட்ட வன்முறைகள்!

## எழிலன் குற்றச்சாட்டு

திருகோணமலை —

திருகோணமலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்துவதற்காக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதாக மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது -

மரக்கறிச்சந்தைப்பகுதியில் குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் பாரவூர்திகளில் அழைத்து வரப்பட்டவர்கள் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தச்சம்பவம் (12 ஆம் பக்கம் பார்க்க)

திருகோணமலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை அடுத்து நேற்று மாலை முதல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

சிங்கள காடையர்கள் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டிருக்கும் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே கால வரையறையின்றி ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## புலனாய்வு அதிகாரி சுடப்பட்டு படுகாயம்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - மீராவோடை இராணுவ முகாமுக்கு முன்பாக இராணுவப் புலனாய்வுத்துறை சிரேஷ்ட அதிகாரியான மேஜர் குமார (வயது 38) மற்றும் அவரது [illegible]கா ஒருவரும் நேற்று மாலை சுடப்பட்டு படுகா[illegible]மடைந்தனர்.

நேற்றுமாலை 5.45 மணி[illegible]ளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில்- (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலவரம்; மன்மோகன் சிங் கவலை

புதுடெல்கி —

இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்தும், பாதுகாப்புச் சூழ்நிலை குறித்தும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் - இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசி முலம் உரையாடியதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் நடைபெற்ற கிளைமோர் தாக்கு தல்கள் மற்றும் போர்நிறுத்த மீறல்கள் குறித்து இந்திய பிரதமர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் நடைபெற்ற அமைதிப் பேரணியின் சில காட்சிகள்...




# படையினரின் கெடுபிடி அதிகரித்ததாலேயே மக்கள் படை தாக்குதல் ஆரம்பித்துள்ளது!

## தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

மக்கள் மீது இராணுவத்தினர் நடத்திவரும் தாக்குதல்கள், படுகொலைகள், சுற்றிவளைப்புத் தேடுதல்கள் அதிகரித்துள்ளதாலேயே - மக்கள் படையின் தாக்குதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது என யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் தெரிவித்தது.

கடந்த சில தினங்களாக மக்கள் மீது படையினர் நடத்திவரும் தாக்குதல்கள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இலங்கைத் தீவில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் தமிழ்மக்களின் உண்மை நிலையை உணர்ந்து கொள்வதில்லை. அன்று தொட்டு இன்றுவரை தமக்கு நெருக்கடிவரும் போது சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொண்டுவிட்டு பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளையும், தீர்வு முயற்சிகளையும் மறந்து - மீண்டும், மீண்டும் தமிழ் மக்கள் மீதும், தமிழ் தேசப்பற்றாளர்கள்மீதும், தமிழ் மாணவர்கள் மீதும் வன்முறையை கட்டவிழ்த்து விடுவது வழமையாகிவிட்டது. இதன் காரணமாக ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்படுவதும் வழமையாகிவிட்டது.

இதனால், எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை. ஆனால், தமிழ்மக்கள் மிக மோசமான பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றார்கள். இதனால் அவர்கள் வன்முறைப் பாதைக்குச் செல்ல நேரிடுகிறது. இதுதான் இன்றைய களயதார்த்தம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் அரச பயங்கரவாதம் காரணமாக மீண்டுமோர் போர்ச்சூழல் தோற்றுவிக்கப்பட்டது. ஆனாலும், கடந்த பெப்ரவரி மாதம் ஜெனிவா நகரில் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசும் பேச்சுக்களில் ஈடுபட்டனர். ஆனாலும், சர்வதேச முன்னிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்த அரசு தவறிவிட்டது.

அடக்கு முறையாளர்களாக சிங்கள அரசும் - தமிழ்மக்கள் அந்த அடக்கு முறைக்குள் வாழ முடியாமல் இழந்த உரிமைகளுக்காகப் போராடுபவர்களாகவும் உள்ளனர். எனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். மாறாக -

ஒட்டுப்படைகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்குப் பதிலாக அவர்கள் துணையுடன் இணக்கப்பாட்டுக்கு மாறாக பல தடவைகள் தமிழ்மக்கள் மீதும், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் தாக்குதல்களை நடத்தி படுகொலைகளைப் புரிகின்றது.

படைகளால் மேற்கொள்ளப்பட்ட பாரிய தமிழின அழிப்பு நடவடிக்கைகள் இன்று சர்வதேச கண்காணிப்பாளர்கள் முன்னிலையிலேயே இடம் பெறுகின்றன. எனவேதான், மேலும் பொறுமை காக்க முடியாமல் ஆத்திரமுற்ற தமிழ் மக்களும், மாணவர்களும் இராணுவத்தினர் மீது மக்கள் படையாகத் தாக்குதல்களை நடத்தத் தொடங்கி விட்டனர். எனவே, சர்வதேச சமூகமோ, அரசோ என்ன கண்டனங்களை வெளியிட்டாலும் இதைத் தடுத்துவிடமுடியாது.

எனவேதான், இன்றைய களயதார்த்தத்தை உணர்ந்து தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் அரச வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்காக மக்கள்படை தாக்குதல்களைத் தொடங்கியுள்ளது. எனவே, இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நாமும் கேட்டுக்கொள்கிறோம். குறிப்பாக அனைத்து இளைஞர், யுவதிகளும் சிந்திக்க வேண்டிய காலமிது.

ஏனெனில், வரப்போகும் இறுதி யுத்தத்தில் தமிழின அழிப்பையே படையினர் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர். இதனை உணர்ந்து அனைத்து தமிழ் இளைஞர், யுவதிகளும் ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராகப் போராடத் தயாராகுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமராட்சியில் படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம் —

வடமராட்சியில் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை பருத்தித்துறை, மந்திகை, கிராமக்கோடு போன்ற பகுதிகளில் வீடுவீடாகச் சென்று தேடுதல் நடத்திய படையினர் வீட்டிலுள்ள பொருட்களை சோதனைக்குட்படுத்தியதுடன், பொதுமக்கள் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, மந்திகை சந்தி, பருத்தித்துறை போன்ற பகுதிகளில் படையினரின் ரோந்து நடவடிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## தொடர்புகொள்ள கோரிக்கை

யாழ்ப்பாபணம் —

பலாலி ஆசிரியர் கலாசாலையில் 2006/2007 கல்வியாண்டுக்கான நீர் உயிரிவள, தொழில்நுட்ப கற்கை நெறிக்கு வர்த்தமானியில் விண்ணப்பங்கள் கோரப்படவில்லை என பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் த.காங்கேசபிள்ளை தெரிவித்தார்.

எனவே, அந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் அந்தத் துறையில் நியமனம் பெற்ற பயிற்றப்படாத ஆசிரியர்கள் தமது விண்ணபங்களுடன் உடனடியாகத்தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தேசிய பாடசாலைகளை கண்காணிக்க இணைப்பாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணம் —

வடக்கு-கிழக்கு மகாணத்திலுள்ள தேசிய பாடசாலைகளை, கண்காணிக்கவும் ஒருங்கிணைக்கவும் மாவட்ட ரீதியாக கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளை கல்வியமைச்சு நியமித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளராக திருமதி எஸ்.மகாலிங்கம், வவுனியா மாவட்ட இணைப்பாளராக திருமதி வீ.ஆர்.எ. ஒஸ்வேட், கல்முனை மாவட்ட இணைப்பாளராக கல்விப்பணிப்பாளர் எம்.பி.எ.தெளபீக், மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளராக எம்.பவளகாந்தன், திருகோணமலை மாவட்ட இணைப்பாளராக கே.திலகரட்ணம், அம்பாறை மாவட்ட இணைப்பாளராக கே.ரண்முந்துபுர, மன்னார் மாவட்ட இணைப்பாளராக எம்.ஏ.ரவல் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

தேசிய பாடசாலைகளின் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்ட இவர்கள் - தேசிய பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள், ஆசிரியர், மாணவர்கள் தொடர்பாக மாகாணக் கல்வித்திணைக்களம்,கல்வியமைச்சு என்பவற்றின் கவனத்துக்கு கொண்டு வருவதுடன் உரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்வர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 32 தேசிய பாடசாலைகள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிறப்பு, இறப்புப் பதிவுகளை கணினி மயப்படுத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்திலுள்ள பிறப்பு, இறப்பு பதிவுகளை கணினி மயப்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட வேலை கள் இடம்பெற்று வருவதாக வட வலய உதவிப் பதிவாளர் நாயகம் என். சதாசிவம் ஐயர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் பிறப்பு, இறப்புத் தொடர்பான நடவடிக்கைகள் பிரதேச செயலகங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டு அங்கு மக்கள் பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை பெறும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தில் ஐந்துக்கும் மேற்பட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் இவ்வாறு பதிவுச் சேவைகள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, தற்போது இந்த சேவைகளை கணினி மயப்படுத்துவதற்கு சர்வதேச நிறுவனம் ஒன்றின் உதவியுடன் ஆரம்பக் கட்டவேலைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# தொண்டு நிறுவனங்கள் அமைத்த வீடுகள் இம்மாத இறுதிக்குள் கையளிக்கப்படும்!

## சுனாமி மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 'தொண்டு நிறுவனங்கள் அமைத்த நிரந்தர வீடுகள் இந்த மாத இறுதிக்குள் கையளிக்கப்படவிருப்பதாக யாழ்.மாவட்ட சுனாமி மேலதிக அரச அதிபர் செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு மற்றும் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுகளில் சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனங்களால் அமைக்கப்பட்ட வீடுகளே கையளிக்கப்படவுள்ளன.

வேல்ட் விஷன் நிறுவனத்தால் பொற்பதிக் கிராமத்தில் அமைக்கப்பட்ட 60 வீடுகளும், சேவாலங்கா நிறுவனத்தால் மருதங்கேணியில் அமைக்கப்பட்ட 20 வீடுகளும், சோஆ நிறுவனத்தால் கட்டைக்காடு மற்றும் முள்ளியானில் அமைக்கப்பபட்ட 20 வீடுகளும், கியூமெடிக்கா நிறுவனத்தால் கற்கோவளத்தில் அமைக்கப்பட்ட 65 வீடுகளுமே கையளிக்கப்படவுள்ளன.

அதேவேளை - போரூட் நிறுவனத்தால் அல்வாய் வடமத்தியில் அமைக்கப்பட்ட 20 வீடுகள் கடந்த மாதம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை - சுனாமி வீடமைப்பு கொடுப்பனவு வழங்கும் உலக வங்கியின் திட்டத்தின் கீழ் தற்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைக்கவென இரண்டாம் கட்ட கொடுப்பனவான 60 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது. முதலாம் கட்ட கொடுப்பனவான 50 ஆயிரம் ரூபா ஏற்க னவே வழங்கப்பட்டது. இந்தத்திட்டத்தின் கீழ் 3 ஆம் கட்ட கொடுப்பனவாக 80 ஆயிரம் ரூபாவும், 4 ஆம் கட்டமாக 60 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவிருப்பதாகவும் சுனாமி மேலதிக அரச அதிபர் தெரிவித்தார். (ரி)

# முஸ்லிம் படையணி உருவாக்கத்துக்கு ஜாதிக ஹெல உறுமய கடும் எதிர்ப்பு!



கொழும்பு —

இராணுவத்தில் தனி முஸ்லிம் படையணி உருவாக்கத்துக்கு ஜாதிக ஹெல உறுமய எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வகட்சி மாநாட்டில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் கூறியதாவது -

மேஜர்கள் முத்தலிப் மற்றும் நிசாம், கப்டன்கள் லத்தீப் மற்றும் நிலாம் ஆகியோர் இராணுவத்தில் சேவையாற்றி தங்களது உயிர்களைத் தியாகம் செய்திருக்கின்றனர்.

தமிழ் இராணுவ அதிகாரிகள் இலங்கை இராணுவம் மற்றும் கடற்படைத் தளபதிகளாக இருந்தனர். இன அடையாளம் ஏதுமின்றி இத்தகைய அதிகாரிகள் இராணுவத்தில் கடமையாற்றியிருக்கும்போது முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்கு எனக் கூறி ஏன் தனி படையணி உருவாக்கப்படவேண்டும்? அவ்வாறெனில் முஸ்லிம்கள் பாதுகாக்கப்படவில்லையா?


இலங்கைத் தீவில் சிங்களர் உரிமையை மட்டுமே அரசபடைகள் பாதுகாக்கின்றன என்ற விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டை இத்தகைய செயற்பாடுகள் உறுதிப்படுத்தும். சிங்களவர்களுக்கான இராணுவமாக இலங்கை இராணுவம் செயற்படுவதாக உலகம் முழுவதும் விடுதலைப் புலிகள் கூறிவருகின்றனர். ஆகையால் இந்த நடவடிக்கையைப் பரிசீலிக்க வேண்டும்.

கடந்த ஜெனிவா பேச்சுக்களில் வடக்கு - கிழக்கில் இயங்கும் துணை ஆயுதக் குழுவினரது ஆயுதங்களைக் களைவதாக அரசாங்கம் ஒப்புக்கொண்டது. அப்படியானால் அந்தக் குழுவினருடன் இணைந்து அரசாங்கம் செயற்பட்டதை அரசாங்கமே ஒப்புக்கொண்டதாகவுள்ளது.

மகிந்த சிந்தனையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி - அரசாங்கம் மேற்கொள்கின்ற எந்தவொரு முக்கிய நடவடிக்கைக்கும் தென்னிலங்கையில் ஒருமித்த கருத்து உருவாக்கப்படவேண்டியது அவசியமாகும்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தம் செய்யப்படும் என்பது உள்ளிட்ட மகிந்த சிந்தனையின் வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்றும் மேதானந்த தேரர் மேலும் தெரிவித்தார்.

# ரணில் அமெரிக்காவுக்கு நேற்று முன்தினம் பயணம்



கொழும்பு —

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் காலை அமெரிக்காவுக்கான பயணத்தை ஆரம்பித்தார்.

நேற்றுமுன்தினம் காலை 7.20 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து லண்டன் நோக்கி புறப்பட்டு, அங்கிருந்து அமெரிக்காவுக்குச் செல்வார் எனத் தெரியவருகிறது.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் பங்கேற்பதற்காகவே அங்கு அவர் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது. (01)

# நேர அட்டவணையை சுவிஸ் தூதரகம் வெளியீடு

கொழும்பு —

விடுதலைப் புலிகளுக்கும் - அரசாங்கத்துக்கும் இடையில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை தொடர்பாக சந்தேகம் ஏற்பட்டுள்ள நிலையில் - இந்தப் பேச்சுவார்த்தை குறித்த நேர அட்டவணையை இலங்கையிலுள்ள சுவிஸ் தூதரகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

இதன்படி இந்தப் பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் 19 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதிவரை ஜெனிவாவில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வை செய்தியாக்க வரும் செய்தியாளர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி ஜெனிவா ஊடக நிலையத்துக்கு சமுகம் தருமாறும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த இரண்டொரு நாட்களாக வடக்கு - கிழக்கில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் ஜெனிவா பேச்சுவார்த்தை நடைபெறுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (01)

# உறுதியான தீர்மானத்தை அரசு எடுக்கவேண்டுமாம்!

## ஜே.வி.பி. கூறுகிறது

கொழும்பு —

இராணுவத்தினர் மீது நடத்தி வரும் தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில் உறுதியான தீர்மானத்தை எடுக்கவேண்டிய நிலை அரசாங்கத் துக்கு ஏற்பட்டுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் அரசியல்குழு இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஜெனிவா சமாதானப் பேச்சின் பின்னர் அரசாங்கமும் - தமிழீழ விடுதலைப் புலிகளும் இணங்கிக் கொண்ட ஏற்பாடானது புலிகளின் இந்தத் தாக்குதல்கள் காரணமாக செயலற்றுப்போயுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன், அரசாங்கமும் உறுதியான தீர்மானத்தை எடுக்கவேண்டும் என ஜே.வி.பி கோரியுள்ளது. (01)

# மலையக இளைஞர்களையும் இராணுவத்தில் சேர்க்க முயற்சி!

கொழும்பு —

இராணுவத்தின் தொண்டர் படைப் பிரிவின் ரைபிள் அணியில் மலையக இளைஞர்களைச் சேர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. முஸ்லிம்களைக் கொண்ட படைப்பிரிவுக்கான ஆட்சேர்ப்பை இராணுவத்தில் தொடங்கியமைக்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே மலையக இளைஞர்களை சேர்க்கவுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.

சேவையில் இணைத்துக்கொள்ளப்படுபவர்கள் தமிழ்மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது முக்கிய தகைமையாகக் கொள்ளப்படும்.

மலையகத் தமிழர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மாதாந்த சம்பளமாக 12 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதுடன் ஏனைய சலுகைகளும் அவர்களுக்குக் கிடைக்கும்.

சேவையில் இணைவோர் 8ஆம் வகுப்பு தேர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்பதுடன், 18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மலையகப்பிரதேசங்களில் அமைந்திருக்கும் இராணுவ முகாம்களில் இந்த மாதம் 15 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை நேர்முகத் தேர்வுகள் நடைபெறவுள்ளன.

மலையக இளைஞர்களை சேவையில் இணைத்துக்கொள்வது தொடர்பாக இராணுவம் கவனம் செலுத்தியுள்ளது இதுவே முதல் தடவையாகும்.

# ஹெல உறுமயவை பௌத்தர்கள் தேர்தல் மூலம் நிராகரித்து விட்டனர்!

## உடுவே தம்மாலோக தேரர் தெரிவிப்பு

கொழும்பு —

இலங்கையின் பௌத்தர்கள் ஜாதிக ஹெல உறுமயவை முற்றாக நிராகரித்துவிட்டனர் அந்தக் கட்சியின் முன்னாள் உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது -

2004 ஆம் ஆண்டு ஜாதிக ஹெல உறுமயவை நாங்கள் தொடங்கி தேர்தலைச் சந்தித்தோம். 9 ஆசனங்களையும் பெற்றோம்.

பௌத்த மத நடைமுறைகளை பின்பற்றுகின்ற நாட்டை உருவாக்குவதற்காக மக்கள் அப்போது வாக்களித்தனர்.

ஆனால், அதிகாரத்தை எந்த விலை கொடுத்தேனும் அடைவது என்ற இலக்கு நோக்கி ஜாதிக ஹெல உறுமய சென்றதால் அதனைத் தொடங்கிய கங்கொடவில சோம தேரர் நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகினார். நானும் சுயேட்சை உறுப்பினராகவே செயற்படுகிறேன்.

ஜாதிக ஹெல உறுமய கட்சி ஒரு இனவாதக் கட்சி, சிங்கள - பௌத்தர்களுக்கு மட்டுமே சேவையாற்ற வேண்டும் என்று விரும்புகிறது. அது நடைமுறைச் சாத்தியமில்லாதது. அதுதான் ஜாதிக ஹெல உறுமய செய்யும் தவறு.

நாம் மக்களில் சாதி, இனம், மதம் பார்க்கக்கூடாது. அது பௌத்தத்துக்கு எதிரானது. ஒட்டுமொத்த நாட்டுக்கும் சேவையாற்ற வேண்டும்.

எதிர்வரும் தேர்தலில் பெரிய கட்சிகளுடன் கூட்டுவைக்காமல், ஜாதிக ஹெல உறுமய தனித்துப் போட்டியிட்டு தனது பலத்தை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் நிச்சயமாக அரசியலிலிருந்து அந்தக் கட்சி வெளியேற்றப்பட்டுவிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# க.பொ.த உயர்தர பரீட்சை ஒத்திவைக்கப்படமாட்டாது

## கல்வியமைச்சு தெரிவிப்பு

கொழும்பு —

அடுத்த மாதம் நடைபெறவுள்ள 22 உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலால் க.பொ.த உயர்தரப் பரீட்சை எந்தக் காரணத்தாலும் ஒத்திவைக்கப்படமாட்டாதென கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சை மேமாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகி ஜீலை மாதம் 15 ஆம் திகதியுடன் முடிவடையவுள் ளது. இந்தத் திகதிகளில் எந்தவித மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாதெனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆரியரத்ன ஹேவகே தெரிவித்தார்.

# சமூக சேவைகள் அமைச்சர் மோசடிகள் நிறைந்த ஒருவர்!

## பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு —

சமூக சேவைகள் அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா மோசடி மிக்கவர் என திக்வெல்ல பிரதேச சபையின் உறுப்பினரான விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கிலிருந்து சென்ற ஊடகவியலாளர்களுக்கும், திக்வெல்ல பிரதேசசபையின் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொள்ளுமாறு ஜே.வி.பிக்கும் அழைப்பு விடுத்திருந்த போதிலும், அவர்கள் கலந்துகொள்ளவில்லையென ஏற்பாட்டாளர்களான தேசிய சமாதானப் பேரவையினர் தெரிவித்தனர்.

இதில் உரையாற்றிய பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினரான விக்கிரமசிங்க - ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே டக்ளஸ் தேவானந்தா மோசடி மிக்கவரென குறிப்பிட்டதுடன், டக்ளஸுக்கு தமிழ்மக்கள் மத்தியில் ஆதரவு இல்லையென்பது கடந்த தேர்தல் மூலம் தெரியவந்துள்ளதாகவும் - இதனை நாம் ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டுவரவிருப்பதாகவும் தெரிவித்தார்.

# இலங்கை சட்டக் கல்லூரிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கொழும்பு —

இலங்கை சட்டக் கல்லூரியின் 2007 ஆம் கல்வி ஆண்டுக்கென புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை இலங்கை சட்டக் கல்லூரி அதிபர் கோரியுள்ளார்.

விண்ணப்பதாரி க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழ்மொழியில் திறமைச் சித்தியும் பெற்றிருக்கவேண்டும்.

தேவையான விண்ணப்பப் படிவங்களை இந்த மாதம் 19 ஆம் திகதி முதல் மே மாதம் 31ஆம் திகதி வரை 750 ரூபாவைச் செலுத்துவதன் மூலம் சட்டக் கல்லூரியிலிருந்து பெறமுடியும்.

சட்டக் கல்லூரிக்கான நுழைவுப் பரீட்சை செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

# வன்முறைகளை கட்டுப்படுத்த சர்வதேசம் உதவ வேண்டும்!

## இலங்கை அரசு வேண்டுகோள்

கொழும்பு —

இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தொடரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர உரிய நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் மேற்கொள்ளவேண்டுமென இலங்கை அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

திருகோணமலைத் தாக்குதல் தொடர்பாக அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன கூறியுள்ளதாவது -

திருகோணமலையில் புத்தாண்டு நிகழ்ச்சிக்காக வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த கடற்படையினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதல் நடத்தியதில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

சமாதான முயற்சிகளுக்கான இணைத்தலைமை நாடுகள் உட்பட சர்வதேச சமூகமானது வடக்கு - கிழக்கில் நீடித்துவரும் இத்தகைய வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

வடக்கு - கிழக்கில் உள்ள இரா ணுவத்தினரை சீண்டுகின்ற மற்றொரு தாக்குதலாக இது நடத்தப்பட்டுள்ளது. போர்நிறுத்த ஒப்பந்தம் மற்றும் ஜெனிவா உடன்பாட்டை பகிரங்கமாக விடுதலைப் புலிகள் மீறியுள்ளனர். இருப்பினும் இத்தகைய சீண்டல் நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்து அரசாங்கம் பொறுமைகாத்து வருகிறது எனத் தெரிவித்தார்.

# 12 இலங்கை மீனவர்கள் நாகபட்டினத்தில் கைது!


கொழும்பு —

தமிழக கடலோர பகுதியான நாகபட்டினம் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 12 இலங்கை மீனவர்கள் இந்திய கடலோர காவற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தப் பகுதியில் இந்திய கடலோர காவற்படையினர் வழமையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை இரண்டு படகுகளில் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்ததை அவதானித்தனர்.

இதனையடுத்து அவர்கள் நின்ற இடத்துக்குச் சென்ற கடலோர காவற் படையினர் 12 இலங்கை மீனவர்களையும் கைதுசெய்தனர்.

# இந்திய அணிக்கு எதிராக இங்கிலாந்து ஆறுதல் வெற்றி



ஜம்ஷெட்பூர் —

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே நேற்று நடைபெற்ற சர்வதேச ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இந்த இரு அணிகளுக்குமிடையே நடைபெற்ற 5 போட்டிகளில் இந்தியா அணி ஏற்கனவே நான்கு போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியிருந்தது.

நேற்றைய 5 ஆவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

ஆரம்ப ஜோடியாக சேவாக் - டோனி களமிறங்கினர்.

இந்த நிலையில் இந்திய அணிக்கு தொடக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

ஸ்கோர் 4 ஆக இருந்தபோது அணியின் அதிரடி வீரர் சேவாக் ஆட்டமிழந்தார்.

தொடர்ச்சியாகப் போட்டிகளில் சொதப்பி பலத்த விமர்சனங்களை எதிர்கொண்டுள்ள சேவாக், அன்டர்சனின் பந்தை சோலங்கியிடம் பிடிகொடுத்து 4 ஓட்டங்களை மாத்திரமே பெற்று ஆட்டமிழந்தார்.

அடுத்து டோனியுடன் - கைவ் ஜோடி சேர்ந்தார். எனினும் ஸ்கோர் 46 ஆக இருந்தபோது 21 பந்துகளில் 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த கைவ், மஃமூத் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து யுவராஜ் களமிறங்கினார். இவராலும் அதிகநேரம் தாக்குப்பிடிக்கமுடியவில்லை. 4 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற யுவராஜ், பிளங்கெட்டால் போல்ட் செய்யப்பட்டு வெளியேறினார்.



அடுத்து ரெய்னா - டோனியுடன் ஜோடி சேர்ந்தார். எனினும் 2 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற ரெய்னா வந்தவேகத்திலேயே பவிலியன் திரும்பினார்.

63 ஓட்டங்களை எடுப்பதற்குள் 4 முக்கிய விக்கெட்டுக்களை இந்திய அணி பறிகொடுத்தபோதும், டோனி தனது அதிரடி ஆட்டத்தின்மூலம் ஓட்டங்களைக் குவித்து அரைச்சதத்தைக் கடந்தார்.

அடுத்து வேணுகோபால் ராவ் களமிறங்கினார். 10 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற ராவ், அன்டர்சனின் பந்தை பிறியரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தபோது ஸ்கோர் 79 ஐ எட்டியிருந்தது.

இந்த நிலையில் டோனியுடன் கைகோர்த்தார் ரமேஸ் பவார். இருவரும் தங்களின் இணைப்பாட்டத்தின்மூலம் இந்திய அணியின் ஸ்கோரை கௌரவமான நிலைக்கு உயர்த்தினர்.

ஸ்கோர் 186 ஐ எட்டும்வரை இந்த ஜோடி தாக்குப்பிடித்தது. இந்த நிலையில் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து சதமடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட டோனி 96 ஓட்டங்களுக்குள் துரதிஷ்டவசமாக ஆட்டமிழக்க நேரிட்டது.

அடுத்து ஹர்பஜன் வந்தார். எனினும் அவரை 4 ஓட்டங்களை மாத்திரமே எடுக்க அனுமதித்த பீற்றர்சன் தனது பந்தின்மூலம் வெளியேற்றினார்.

இந்த நிலையில் ஆர்.பி.சிங் களமிறங்கினார். ஆனால், மறுமுனையில் அரைச் சதத்தைக் கடந்த ரமேஸ் பவார் ஆட்டமிழந்தார்.

83 பந்துகளில் 54 ஓட்டங்களை எடுத்திருந்த ரமேஸ் பவார், கொலிங்வூட்டின் பந்தை ஹோகாட்டிடன் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அப்போது ஸ்கோர் 209 ஆக இருந்தது.



அடுத்த ஆர்.பி.சிங் 7, வி. ஆர்.வி.சிங் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். முனாப் பட்டேல் 1 ஓட்டத்துடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

இந்த நிலையில் இந்திய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் அன்டர்சன் 3, மஃமூத் 3, பிளங்கெட் 2, பிற்றர்சன், கொலிங்வூட் தலா 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

224 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணியின் ஆரம்ப வீரர்களாக ஸ்ரரஸ் - பெல் ஜோடி களமிறங்கியது.

இருவரும் அதிரடியாக விளையாடி இங்கிலாந்து அணியின் ஸ்கோரை எகிறவைத்தனர். இவர்களைப் பிரிக்க இந்திய அணியின் பந்துவீச்சாளர்கள் ஆக்ரோஷமாகப் போராட வேண்டியிருந்தது.

தங்களின் இணைப்பார்ட்டத்தின் மூலம் இந்த ஜோடி ஸ்கோரை 107 வரைக்கும் உயர்த்தியது.

இந்த நிலையில் 64 பந்துகளில்



46 ஓட்டங்களைப் பெற்றிருந்த பெல், ஹர்பஜனின் பந்தை டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து சோலங்கி களமிறங்கினார். எனினும் 7 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற இவர் ரமேஸ் பவாரால் போல்ட் செய்யப்பட்டு வெளியேறினார். அப்போது ஸ்கோர் 120 ஆக இருந்தது.

இதையடுத்து ஸ்ரரஸுடன், பிற்றர்சன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ஸ்கோர் 198 ஐ எட்டும்வரை தாக்குப்பிடித்தது. இந்த நிலையில் பீற்றர்சன் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து கொலிங்வூட் களமிறங்கினார். இந்த நிலையில் சிறப்பாக விளையாடி 74 ஓட்டங்களைக் குவித்த ஸ்ரரஸ் காயமடைந்து மைதானத்தைவிட்டு வெளியேறினார்.

இதையடுத்து கொலிங்வுட்டுடன், பிறியர் ஜோடி சேர்ந்தார். எனினும் 3 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற பிறியரை ஹர்பஜன் தனது சுழலில் வெளியேற்றினார். அப்போது ஸ்கோர் 207 ஆக இருந்தது.


அடுத்து பிளங்கெட் வந்தார். எனினும் ஓட்டமெதையும் பெறாத அவர் வந்தவேகத்திலேயே வெளியேறினார்.

இதையடுத்து பிளெக்வெல்- கொலிங்வூட்டுடன் ஜோடி சேர்ந்தார். இவர்கள் இருவரும் இறுதிவரை ஆட்டமிழக்காது (கொலிங்வூட் 23, பிளெக்வெல் 14) இங்கிலாந்து அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச்சென்றனர். 42.4 ஆவது ஓவரில் இங்கிலாந்து அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களை எடுத்து வெற்றி இலக்கை அடைந்தது.

பந்துவீச்சில் ஹர்பஜன் 3, ரமேஸ் பவார் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# வெற்றியை நோக்கி அவுஸ்ரேலிய அணி!





பதுல்லா —

அவுஸ்ரேலிய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையே பதுல்லாவில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்டின் நேற்றைய நான்காம்நாள் ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி 4 விக்கெட் இழப்புக்கு 212 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தப் போட்டில் முதலாவது இனிங்ஸில் பங்களாதேஷ் அணியைவிட 158 ஓட்டங்களால் அவுஸ்ரேலியா பின்தங்கியிருந்தது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் பங்களாதேஷ் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சாலே 29 ஓட்டங்களுடனும், மசூத் ஓட்டமெதையும் பெறாமலும் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

எனினும் நேற்றைய ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியின் விக்கெட்டுக்கள் மளமளவென்று சரிய ஆரம்பித்தன. 148 ஓட்டங்களுக்குள் பங்காதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. இதில் சாலே மாத்திரம் ஓரளவு சிறப்பாக விளையாடி 33 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

ஏனையோரில் மசூத் 0, ரபீக் 14, மோட்ராசா 0, இனாமுல் ஹக் ஜூனியர் 0, என குறைவான ஓட்டங்களுக்குள் பவிலியன் திரும்பினர். சதாத் ஹுசைன் 1 ஓட்டத்துடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ஜிலெஸ்பி 3, வோர்ன் 3, லி, மக்கில், கிளார்க் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

306 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அவுஸ்ரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக ஹைடன்- ஹுசே ஜோடி களமிறங்கியது.

இவர்கள் இருவரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்களைக் குவிக்க ஆரம்பித்தனர்.

எனினும் ஸ்கோர் 72 ஐ எட்டியபோது இந்த ஜோடி பிரியநேரிட்டது. 79 பந்துகளில் 37 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹுசே - இனாமுல் ஹக் ஜூனியரால் போல்ட் செய்யப்பட்டு வெளியேறினார்.

அடுத்து பொன்டிங் களமிறங்கினார். ஹைடன் - பொன்டிங் ஜோடியின் இணைப்பாட்டத்தின்மூலம் அவுஸ்ரேலிய அணியின் ஸ்கோர் கிடுகிடுவின் உயர்ந்தது.

எனினும் ஸ்கோர் 173 ஆக இருந்தபோது ஹைடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

152 பந்துகளில் 8 பவுண்டரிகள் அடங்கலாக ஹைடன் 72 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

அடுத்து மாட்டின் களமிறங்கினார். எனினும் 7 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்த மார்டின், ரபீக்கால் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். அப்போது ஸ்கோர் 183 ஆக இருந்தது.

இந்த நிலையில் கிளார்க் களமிறங்கினார். 9 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற கிளார்க், ரபீக்கின் பந்தை மசூத்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ஒருபுறம் விக்கெட்டுகள் சரியத் தொடங்கியபோதும் மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பாடிக்கொண்டிருந்த பொன்டிங் அரைச்சதத்தைக் கடந்தார்.

அடுத்து பொன்டிங்குடன் - கில்கிறிஸ்ட் ஜோடி சேர்ந்தார்.

இந்த நிலையில் நேற்றைய ஆட்டநேர முடிவில் அவுஸ்ரேலிய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களை எடுத்திருந்தது.

களத்தில் பொன்டிங் 72, கில்கிறிஸ்ட் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் ரபீக் 2, இனாமுல் ஹக் ஜூனியர் 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் அவுஸ்ரேலியா 84 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றிபெறும். 6 விக்கெட்டுகள் கைவசம் உள்ளன. போட்டியின் இறுதி நாள் இன்றாகும்.

# மேற்கிந்திய கிரிக்கெட் அணித்தலைவர் பதவியிலிருந்து சந்தர்போல் விலகல்!



சயானா —

மேற்கிந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் சந்தர்போல் நேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:

இதுவரை கப்டன் பதவியில் ஆதரவளித்த அனைத்து வீரர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தவுள்ளேன். அடுத்த கப்டனாக வருபவருக்கு முழுமனதுடன் ஆதரவு கொடுப்பேன். அணிக்காக கடுமையாக உழைப்பேன் என அவர் கூறினார்.

சந்தர்போல் தலைமையில் மேற்கிந்திய அணி 14 டெஸ்டில் விளையாடி ஒரே ஒரு டெஸ்டில் மட்டும் வெற்றிபெற்றது. 10 டெஸ்டில் தோல்வியைத் தழுவியது. 3 போட்டியைச் சமப்படுத்தியது. மேலும் 16 ஒரு நாள் போட்டியில் 2 ஆட்டங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. மீதமுள்ள 14 ஆட்டங்களில் படுதோல்வியைச் சந்தித்துள்ளது.

சந்தர்போலின் இந்த முடிவு மேற் கிந்திய கிரிக்கெட் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தமாத இறுதியில் சிம்பாப்வே அணி மேற்கிந்தியா சுற்றுப் பயணம்செய்து 7 ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

அதற்குள் அடுத்த கப்டனை தேர்வுசெய்யவேண்டும். இதனால் புது கப்டன் தேர்வு விரைவில் அறி விக்கப்படும் என அந்த நாட்டு கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

## விளையாட்டு

### இன்றைய ரேக்கி கிண்ண கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம் —

இலங்கை கிரிக்கெட்டின் 3 ஆம் பிரிவுக்காக யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட 13 கழகங்களுக்கிடையிலான லீக் முறையிலான ரேக்கி கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இரண்டு போட்டிகள் இன்று காலை 9.30 மணிமுதல் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து - சென்ற லைட்ஸ் விளையாட்டுக்கழகம் மோதும் போட்டியும், யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்டன் அணி மோதும் போட்டியும் நடைபெறவுள்ளன. (58)

# முனீஸ்வரன் வீதி நடைபாதை கடைகள்

# 15 ஆம் திகதிக்குப் பின் அகற்றப்படும்!

## யாழ்.மாநகர ஆணையாளர் அறிவிப்பு

நல்லூர்

சகல தனியார் மினிபஸ்களும் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் பண்ணை தரிப்பிடத்தில் நின்று முனீஸ்வரன் வீதியூடாக பஸ்நிலையத்தை அடைந்து பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு ஏற்பாடாகியுள்ளது.

எனவே, இனிமேலும் அதற்கு நடைபாதை வியாபாரிகள் இடையூறு செய்வதற்கு அனுமதிக்க முடியாதென யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் நடைபாதை வியாபாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

முனீஸ்வரன் வீதி நடைபாதை வியாபாரிகளுக்குரிய இடமல்ல. அது பொதுமக்களதும், வாகனங்களதும் போக்குவரத்துக்கு உரிய வீதியாகும். அத்துடன் நடைபாதை வியாபார அங்காடி ஒரு இலட்சம் ரூபா செலவில் அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தனியார் மினிபஸ் சங்கத்தை இந்தப் பாதை ஊடாகப் பிரயாணத்தைத் தொடங்குமாறு மாநகரசபை வேண்டியுள்ளது. நகர மத்தியில் மினிபஸ்கள் நிற்பதால் பொதுமக்கள் நாள்தோறும் இன்னல் படுகின்றனர்.

இவர்களுக்குப் பண்ணையில் ஓர் தரிப்பிடம் பல இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளது.

முனீஸ்வரன் வீதிக் கடைகள் அகற்றப்பட்டால் மினிபஸ்கள் பண்ணைத் தரிப்பிடத்துக்குக் கொண்டு செல்வதற்கும், முனீஸ்வரன் வீதியூடாகத் தமது பிரயாணத்தை நடைமுறைப்படுத்தவும் ஒத்துக் கொண்டுள்ளனர்.

பொதுமக்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் பற்றிப் பல பொது அமைப்புக்கள் பத்திரிகை மூலமும், கலந்துரையாடல்களிலும் சுட்டிக் காட்டியுள்ளனர். எனவே இவற்றைப் பார்த்துக்கொண்டு மாநகரசபையால் இருக்க முடியாது.

அங்காடி வியாபாரிகளை வீதியிலிருந்து அகற்றுவதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்தபோது - தாங்கள் பல கோரிக்கைகளை எழுத்துமூலம் தந்து, சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு 15.04.06 ஆம் திகதி வரை முனீஸ்வரன் வீதியில் வியாபாரம் செய்வதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் சபை உத்தியோகத்தர்கள் முன்னிலையில் அங்காடி வியாபார சங்க உறுப்பினர்கள் கைச்சாத்திடப்பட்டது.

மேலும் சங்கத்தால் 17.03.2006 ஆம் திகதி மீண்டும் 47 வியாபாரிகள் ஒப்பமிட்டு ஓர் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், 120 வியாபாரிகள் இருப்பதாகவும் பல கடிதங்கள் மூலமும் பத்திரிகை மூலமும் மாநகர சபையின் செயற்பாட்டுக்கு எதிராகக் கருத்துத் தெரிவிப்பது வியப்பாகவுள்ளது.

தொடர்ச்சியாகப் பற்றுச்சீட்டுப் பெற்றவர்களுக்குக் கடைகள் வழங்கப்பட்டுள்ளது. இடையிடையே பற்றுச்சீட்டுப் பெற்றவர்களுக்கு (சில நாட்கள் வந்துபோனவர்கள்) கடைகள் வழங்கமுடியாதுள்ளது.

விரும்பினால் தங்களுக்கு வழங்கப்பட்ட கடைகளைப் பகிர்ந்து வியாபாரம் செய்யலாம். மலசல வசதி, நீர் விநியோக வசதிகளுடன் நடைபாதை வியாபாரத்தில் ஒருவரும் ஈடுபடவில்லை என்ப..த நினைவில் கொள்ளவும்.

இவற்றைப் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். எனவே இதைக் காரணமாகக் கொண்டு இடமாற்றத்துக்கு இடையூறாகும் விதத்தில் செயற்படமுடியாது.

குறிப்பிட்ட தினத்துக்குள் முனீஸ்வரன் வீதியிலுள்ள கடைகளை அகற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்காவிடின் கடைகளை அகற்றுவதற்குச் சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை உறுதியாக அறியத்தருகிறேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிழங்கு செய்கையை தவிர்க்கும் விவசாயிகள்

மட்டுவில்


சாவகச்சேரிப் பகுதி விவசாயிகள் தற்போது வற்றாளை, மரவள்ளி போன்ற கிழங்குப் பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து வருகின்றனர்.

இந்தப் பகுதியிலுள்ள கிராம் புவில், பெருங்குளம், கற்குழி, மட்டுவில் முதலியாவெளி போன்ற வயல் வெளிகளில் இடப்பெயர்வுக்கு முந்திய காலப்பகுதியில் மேற்படி பயிர்ச்செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அது மட்டுமன்றி குரக்கன், வெள்ளரி, வத்தகை, .கெ..ரி போன்ற பயிர் செய்கைகளும் மேற்கொள்ளப் பட்டன.

ஆனால், தற்போது இந்தப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை.

இடப்பெயர்வின் பின் ..ருகிய பன்றிகளின் தொல்லையும், விவசாய உள்ளீடுகளில் ஏற்பட்ட விலையுயர்வும், கூலியாட்களின் கூலி அதிகரிப்புமே இந்த உற்பத்தி நிறுத்தப்படக் காரணம் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (24)



நபிகள் பெருமானின் பிறந்த தினத்தைக் குறிக்கும் மீலாத் நிகழ்வு நேற்றுமுன்தினம் உலகம் முழுவதிலுமுள்ள இஸ்லாமிய மக்கள் அனுஷ்டித்தனர். இதை முன்னிட்டு யாழ். நகரின் அமைந்துள்ள பள்ளிவாசல் அலங்கரிக்கப்பட்டிருப்பதையும், மீலாத் தொழுகையில் ஈடுபட்டுள்ள இஸ்லாமிய மக்களையும் படங்களில் காணலாம்.

# கடந்த வருடம் வழங்கிய விதைநெல்லால் உரிய விளைச்சலைப் பெறமுடியவில்லை

## வலி.தெற்கு விவசாயிகள் கவலை

உடுவில்

கமத்தொழில் திணைக்களத்தால் கடந்த வருடம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விதை நெல் மூலம் உரிய விளைச்சலை பெற முடியவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விவசாய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் இந்தக் குறைபாடு பற்றி அங்கு பிரஸ்தாபித்தனர். அவர்கள் இதுபற்றி மேலும் தெரிவிக்கும்போது ஒரு புசல் விதை நெல் 720/- ரூபாவுக்குப் பெற்றுக் கொண்டதாகவும், அதில் நெல் இனத்தைக் குறிக்கும் லேபிள் காணப்படவில்லைஎனவும், ஈக்கு, நெல் இனமே வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

இந்தப் பிரதேசத்தில் உருண்டை இன நெல்லுக்கே அதிக கிராக்கி உள்ளதாகத் தெரிவித்த அவர்கள் - தனியாரிடம் ஒரு மூடை விதைநெல் (68 கிலோ) 900 ரூபாவாகவும், வன்னியில் 700 ரூபாவாகவும் விற்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இந்த வருடம் வழங்கப்படவுள்ள விதைநெல்லில் உள்ள லேபிள் இருக்கவேண்டுமெனவும், அவ்வாறு அது அகற்றப்பட்டிருந்தால் விவசாயத் திணைக்களத் தால் அதற்குப் பதிலாக எழுதி கட்டப்பட்டிருந்தாலே கொள்வனவு செய்ய முடியும் என அவர்கள் தெரிவித்தனர். (101)

## கேணிகளை புனரமைக்குமாறு பிரதேச செயலரிடம் கோரிக்கை

சண்டிலிப்பாய்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வடலியடைப்பு பகுதியில் உள்ள இரண்டு பொதுக்கேணிகள் மிக நீண்டகாலமாக எவ்வித பராமரிப்புமின்றி அழிந்து செல்வதாகவும், எனவே அவற்றை உடனடியாகப் புனரமைப்புச் செய்து தருமாறும் அந்தப் பகுதி மக்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி பகுதியில் காணப்படும் பழமை வாய்ந்த இந்தக் கேணிகளுக்குள் அந்தப் பகுதியில் உள்ள சில விஷமிகள் கழிவுப் பொருட்களையும், இறந்த கால்நடைகளையும் போட்டு கேணிகளை நாசமாக்கி வருகின்றனர்.

எனவே, இந்த நாசகார வேலைகளைத் தடைசெய்து, இந்தக் கேணிகளைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (44)

## நல்லூர் பிரதேச செயலகத்தின் கலை இலக்கிய போட்டி முடிவு

யாழ்ப்பாணம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட பிரதேச கலை இலக்கிய போட்டி முடிவுகளைப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

கட்டுரை, கவிதை, சிறுகதை ஆக்கப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு;

### கட்டுரை ஆக்கம்

#### சிரேஷ்ட பிரிவு

முதலாமிடம்-விஜயரகு நாதன் ஸ்ரீவித்தகன்(யா/இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் - ஸ்ரீ கஜலக்சுமி பத்மநாதஐயர் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி).

#### கனிஷ்ட பிரிவு

முதலாமிடம்-கோபிகா நாகேஸ்வரன் (யா/கொக்குவில் ஸ்ரீஇராமகிருஸ்ணா வித்தியாலயம்), இரண்டாமிடம் - ப.ஒஸ்ரியா (யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), மூன்றாமிடம் - தீபா சிவராஜா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி).

### கவிதை

முதலாமிடம் - ஸ்ரீகஜலக்சுமி பத்மநாதஐயர் (யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி), இரண்டாமிடம் - சங்கீதா தவராசா, ஜனனி ஜெயக்குமார் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி).

### சிறுகதை ஆக்கம்

முதலாமிடம்- சங்கீதா தவ ராசா (யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி), இரண்டாமிடம் - கஜந்தா கருணாகரன் (யா/இந்துக்கல்லூரி), மயூரி சகாதேவன் (யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்).


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு




பெயர் : தி.ராகவி
முகவரி : அல்வாய்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்
முகவரி
பிறந்த ஆண்டு
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


## தவக்கால நற்சிந்தனை



புனித வாரத்தின் கடைசி மூன்று நாட்கள் மிகவும் முக்கியமான நாட்கள். யேசுவின் இறுதி நாள் நிகழ்வுகளை நினைவுறுத்தும் நாட்கள். இன்று பெரிய வியாழன் என்று பெயர் பெற்ற நாள். இன்று இரு முக்கிய அருட்சாதனங்களை யேசு ஏற்படுத்துகிறார். தமக்குப் பின்னும் சீடர்கள் தம் பணியைத் தொடர எண்ணி பணிக் குருத்துவத்தை ஏற்படுத்துகிறார்.


அதன் அடையாளமாகப் பன்னிரு சீடர்களின் பாதங்களைக் கழுவிப் பணி..தார். இதன் உட்பொருள் பணிவிடை பெற அ..., மாறாக பணிவிடை புரியவே வந்தேன் என்பதை எண்பித்து, தமது இந்தப் பணியைச் சீடர்களும் தொடரவேண்டும் எனப் பணித்தார். அடுத்ததாக நற்கருணை அருட்சாதனத்தை ஏற்படுத்தினார். இதனைத் தமது நினைவாக என்றும், எவ்விடத்திலும், எந்நேரத்திலும் தொடரும்படி வேண்டினார். நற்கருணையிலே தமது விலைமதிக்க முடியாத அன்பின் அடையாளமாகத் தம்மையே நமக்குக் கொடுத்தார். யேசு ஏற்படுத்திய நற்கருணையானது அலகையின் பிடியிலிருந்தும், பாவத்தினால் நம் மீது விழுந்த சாபமாகிய மரணத்தின் பிடியிலிருந்தும் நம்மை விடுவிக்கவும், நமது ஆன்ம உணவாகவும், பிணிகள் தீர்க்கும் அருமருந்தாகவும் அமைகிறது. இந்த நற்கருணையிலே அதிக பக்திகொண்டு இறைபிரசன்னத்தைத் தேடுவோம்.

- [illegible]




# படிப்படியாக முன்னேறும் வாய்ப்பு சாக்கு விற்பனைமூலம் கிடைத்தது

**603, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ராமராஜன் சன்ஸ் என்னும் கடையொன்றைத் திறந்து இயக்கி வரும் அழகர்சாமி ராமராஜ் (வயது 58) என்பவரைச் சந்தித்து உரையாடிபோது.......**



எனது பிறப்பிடமான நுவரெலியாவில் இருந்து 1963 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்தேன். இங்கே வந்ததும் அன்றைய காலத்தில் சாக்கினது தேவை கூடுதலாக இருந்ததால் சாக்குக் கடை ஒன்றில் சேர்ந்து வேலை செய்தேன். பின்பு சைக்கிளில் சாக்கினைக் கட்டிக்கொண்டு வீதி வீதியாகச் சென்று விற்பனை செய்து வந்தேன். அதில் ஏற்பட்ட முழுமையான ஈடுபாடும், பற்றும் இன்று வரை ஒரே தொழிலைத் தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக அமைந்தது எனலாம்.

சாக்குத் தொழிலில் கூடுதலான இலாபம் ஏற்பட்ட காலப்பகுதியாகையால் சாக்குத் தொழில் என்று இலக்காரமாகச் சொல்லிவிட முடியாது.

ஆரம்ப காலங்களில் கூடுதலாக வெள்ளாமை மேற்கொள்ளப்பட்டதாலும் சாக்கின் தேவை அதிகரித்துக் காணப்பட்டது. விவசாய உற்பத்தியால் யாழ்ப்பாண மண் கூடுதலாக பயன்பட்டதால் அன்றைய காலங்களில் மிளகாய் - வெங்காயம் கூடுதலான உற்பத்தியில் சாக்கினது தேவை இருந்தது. அன்றைய காலங்களில் எமது மண்ணில் இருந்து கூடுதலாக உற்பத்திப் பொருட்கள் அனுப்பப்பட்டதால் இங்கேயே பொதி செய்யும் வேலை ஒன்று தனியாக இருந்ததால் சாக்கின் தேவை இருந்தது.

எமது உள்ளூர் உற்பத்தி வீழ்ச்சி கண்டதால் - இன்று கொழும்பில் இருந்து உற்பத்திப் பொருட்கள் வருகின்றன. இதனால், அங்கேயே கூடுதலாகப் பொதி செய்யப்படுவதால், எமக்கான தேவைகள் குறைந்து கொண்டு செல்கிறது.

இங்கே இயங்குகின்ற அரிசி ஆலைகளும், கொழும்பில் இருந்து சாக்கைப் பெற்றுக் கொள்கிறன. இதனால் ஒரு சில எமது வாடிக்கையான அரிசி ஆலைகள் மட்டும் எம்மிடம் சாக்கை வாங்கிச் செல்கின்றார்கள். அடுத்ததாக உற்பத்தி செய்த பொருட்கள் இலகுவாகப் பொதி செய்து கொழும்பில் இருந்து வருகிறது. அந்தப் பையின் விலையும் குறைவாக இருப்பதுடன், சாக்கின் விலை கூடவாக இருப்பதால் எமது விற்பனையில் பின்னடைவு ஏற்படக் காரண மாக இருக்கலாம்.

ஆனால், இலகுவான பொதி முறையில் அமைந்த பைகளைவிட சாக்கின் பொதியில் பொருட்களின் பாதுகாப்புக் கூடுதலா இருப்பது எல்லோருக்கும் தெரியும்.

அன்றைய காலங்களில் பொருட்கள் குறைவாக இருந்தாலும், சாக்கின் விற்பனையில் இலாபம் கூடுதலாக இருந்தது. இன்று பொருட்கள் கூடுதலாக இருந்தாலும், சாக்கின் விற்பனை குறைவாக இருப்பதற்குக் காரணம் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தாங்களே பொதிசெய்தும் விடுவதால், தனிப்பட்ட ரீதியில் சாக்கைக் கொள்வனவு செய்து விற்பனை செய்வதால் இன்று இலாபம் குறைவாக இருக்கிறது. ஆனாலும், ஆரம்ப நாளில் இன்று செய்து வந்த தொழில் ஆன படியால் கைவிட மனமில்லாமல் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறேன்.

கொழும்பில் இருந்து சாக்கை வாங்கி விற்பனை செய்வது இலாபம் குறைவாக இருப்பதால், இனிவரும் காலங்களில் இங்கேயே சாக்கை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் திட்டம் என்னிடம் இருக்கிறது. இதற்கான இயந்திரத்தின் விலை கூடுதலாக இருப்பதால் - வாங்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் இந்த மண்ணிலே சாக்கைச் செய்து கொழும்பில் இருந்து கொள் வனவு செய்பவர்களுக்கு இங்கேயே சாக்கைப் பெறக் கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுப் பேன் என்று உறுதியுடன் தொழில் பற்றுடன் கூறி முடித்தார் அவர்.

**- செல்வா -**

# சத்துள்ள வைக்கோல் தயாரிப்பது எப்படி?

இலங்கையின் வரண்ட பிரதேசங்களில் அறுவடைக்குப்பின் போதியளவு வைக்கோல் உண்டு. இந்த வைக்கோலைப் பலர் வயலில் எரித்து நிலத்துக்குப் பசளையாக்குவார்கள். சிலர் வயலில் போட்டு உக்க விடுவார்கள். இவ்வாறு இலாபகரமற்ற முறையில் வைக்கோலைப் பாவிப்போருக்கு இலாபகர மான பிரயோசனமான முறையை நாங்கள் இங்கு தருகிறோம்.



வைக்கோலை யூரியாவுடன் கலந்து, பசு மாடுகளுக்கு உணவாகக் கொடுப்பின் வரண்ட காலத்தின் போது புல் மற்றும் தீவனக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய யூரியா கலக்கப்பட்ட வைக்கோல் சிறந்த சத்துள்ள உணவாக அமையும். இவ்வாறு உணவூட்டுவதால், வரண்ட காலத்தில் மாடுகள் மெலிவதையும், பாலுற்பத்தி குறைவதையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

புண்ணாக்கு மிகவும் விலையுயர்ந்ததால் இதைத் தொடர்ந்து பாவிப்பது செலவீனத்தைக் கூட்டும்.

பசளைக்காகப் பாவிக்கப்படும் யூரியாவே வைக்கோலைச் சத்தூட்டப் பாவிக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு பசுவுக்கு எவ்வளவு வைக்கோல் கொடுப்பீர்களோ அவ்வளவு வைக்கோலை ஒரு கிலோ கிராமுக்கு 18 கிராம் யூரியாவை ஒரு லீற்றர் நீரில் கரைத்துத் தெளிக்க வேண்டும்.

# மிளகாய்ப் பயிர்ச்செய்கை

(சென்றவாரத் தொடர்ச்சி...)

பயிரில் சாற்றை உறிஞ்சும் பொழுது வைரசுக்களைப் பரப்புகின்றது.

இவற்றைக் கட்டுப்படுத்த களைகளைக் கட்டுப்படுத்தல். பயிர்கள் நன்கு வீரியமாக வளர சகல நடவடிக்கைகளையும் எடுத்தல். பீடைகொல்லிகளை விசிறி பீடைகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்.



இமிடச்சோபிற்ட்
லீற்றருக்கு 200 கிராம்- 200- 300மில்லி லீற்றர் செறிகுளம்பு புறொபெனபொஸ்
500 கிராம் செறி குளம்பு- 450-500 மில்லி லீற்றர்.
புரத்தியோ பொஸ்
500 கிராம் செறிகுளம்பு - 1800 மில்லி லீற்றர். பொஸ்லோன் 350கி-500-600 செறிகுளம்பு.

தோட்டத்தில் நாற்றுக்கள் நட்டு 10-24 நாட்களில் பீடைகொல்லிகள் விசிறுதல் வேண்டும். மீண்டும் 10-15 நாட்களுக்கு ஒரு தடவை கிருமிகளின் தாக்க அறிகுறி தெரிந்தால் கிருமி நாசினிகளை விசிறல் வேண்டும். சிற்றுண்ணி (Mites) அதிகளவில் காணப்பட்டால் 1.6 கிராம் கந்தகம் சேர்த்து பீடை கொல்லியுடன் விசிறல் வேண்டும்.

புறொத்தியோ பொஸ் பீடைகொல்லி விசிறி 21 நாட்களுக்கும் பின்னும் ஏனைய கிருமி பீடை நாசினிகள் விசிறி 14 நாட்களுக்குப் பின்னும் அறுவடை செய்தல்.

**காய்த்துளைப் பான் (pod borer)**

தாவரங்கள் பூக்கத் தொடங்கும் பருவம் முதல் இந்தப் பூச்சிகளைப் பற்றி கவனம் எடுத்தல் வேண்டும். தயோடிகாப் 375 கிராம் செறிகுளம்பு- 300 - 500 மில்லி லீற்றர், குளோரோ புளூரசோன் 50 கிராம் செறிக்குளம்பு 300 மில்லி லீற்றர், மெத்தோமில் 180 கிராம் திரவச்செறிவு 1232 மில்லி லீற்றர்.

இந்தப் புழுக்கள் இரவிலே சுறுசுறுப்பாகக் காணப்படும். எனவே இந்தப் பூச்சி கொல்லிகளை மாலை 4 மணிக்குப்பின்னர் விசிறல். மிளகாயத் தாவரங்களில் இலைகளின் நீர் படியும் தன்மை குறைவு. எனவே விசிறும் பூச்சி கொல்லிகளின் தொழிற்பாட்டை அதிகளவில் பற்றுவதற்கு அவற்றுடன் ரயிரோன் போன் இரசாயனப் பொருட்களுடன் கலந்து விசிறுதல்.

**அறுவடை செய்தல்**

நன்கு முற்றிய கடும் பச்சை நிறமான காய்களை அறுவடை செய்தல் வேண்டும். செத்தல் மிளகாயை உற்பத்தி செய்வதற்கு நன்கு பழுத்த சிவப்பு நிறமான பழங்களை அறுவடை செய்தல். நாற்று நட்டு 70-80நாட்களில் அறுவடையை ஆரம்பிக்கலாம். 2-3 மாத காலத்தில் தொடர்ச்சியாகக் காய்களைப் பிடுங்கலாம். 8-10 நாட்களுக்கு ஒரு தடவை பயன்படுத்தி, குறைந்தளவு 14 நாட்களுக்குப் பின் அறுவடை செய்தல் மிக அவசியமாகும்.

**மதுரன் 2 ஆம் வருடம் விவசாயபீடம்.**

# சந்தைப்படுத்தலுக்கு முன்...

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**கூடைகள்**

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உற்பத்திப் பொருட்களை அடைக்கும் முறையே பெருமளவில் கடைப்பிடிக்கப்படுகின்றது. ஏனெனில் கூடைகள் பாரமற்றவை. உள்ளூர் மூலப் பொருட்கள் மூலம் தயாரிக்கப்படலாம். காற்று உள்ளே போகும் தன்மையுடையவை. மலிவானவை.



எனினும், கூடைகளில் பாரமான பொருட்களைப் போடுவது சற்றுக் கஷ்டம். சிலவேளைகளில் பொருட்களை அடைக்கும் பொழுது அவற்றின் அமைப்பு மாறுவதுடன் அவை சேதமடையவும் செய்கின்றன.

சில சந்தர்ப்பங்களில் கூடைகளை ஒரு தடவைதான் பாவிக்கக் கூடியதாக இருக்கும். பெரும்பாலான கூடைகள் ஏற்றி இறக்கப்படும் பொழுது பழுதடைந்து விடுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவற்றைத் தூக்கி ஏறிந்து விடுவதைத் தவிர வேறு வழியிருக்காது.

பொதுவாகக் குறைந்த தூரத்துக்குப் பொருட்களை ஏற்றியிறக்கவே கூடைகளின் பாவனை அதிக நன்மையை அளிக்கிறது. கூடைகள் சிறிதாக இருந்தால் அவற்றைப் போக்குவரத்து செய்வதற்கு வசதியாக இருப்பதுடன் அவை நீண்ட காலத்துக்கும் உழைக்கும்.

**மரப்பெட்டிகள்**

உற்பத்திப் பொருட்களை நீண்ட தூர இடங்களுக்கு அதாவது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் போது, மரப்பெட்டிகளைப் பாவிப்பது விரும்பத்தக்கது. ஆனால், அவை பாரமற்றவைகளாக இருந்தால் தான் ஏற்றிச் செல்வதற்கு சுலபமாக இருக்கும். அவற்றில் சிறிய அல்லது அளவான துவாரங்கள் இருந்தால் ; தான் பொருட்கள் கெட்டுப்போகாது.

மரப்பெட்டிகளில் 3 அல்லது 4 அடுக்குகளை அமைக்கலாம். ஆனால், கீழே இருக்கும் அடுக்கில் உள்ள பொருட்கள் மேலே உள்ள பாரத்தால் நசிவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பொருட்களின் போக்குவரத்துக்கு ஒரே பெட்டியைப் பல தடவைகள் பாவிக்கக்கூடிய வசதியுண்டு.

ஆனால், எமது நாட்டில் மரப்பெட்டிகளின் விலை சற்று அதிகமாக இருப்பதனால் அவற்றின் பாவனையை விவசாயிகள் விரும்புவதில்லை.

**அட்டைப்பெட்டிகள்**

சமீப காலமாக எமது நாட்டில் சில உற்பத்திப் பொருட்களை ஏற்றியிறக்கல் செய்ய அட்டைப் பெட்டிகள் பாவிக்கப்படுதல் அதிகமாகி வருகின்றது.

அட்டைப் பெட்டிகள் பாரமற்றவைகளாக இருப்பதனால் அவற்றைச் சுமப்பதில் அதிக கஷ்டம் இருக்காது. இவையும் மாப்பெட்டிகள் போல் காற்றுப் போகாவண்ணம் இருப்பதனால் வேண்டியளவு துவாரங்கள் போடுவது அவசியம்.

இந்தப்பெட்டிகள் மரப்பெட்டிகள் போல் உறுதியானவை அல்ல. அத்துடன் நீண்ட காலம் உழைக்கக்கூடியவையும் அல்ல. இவை நசியும் தன்மை கொண்டவையாக இருப்பதனால் ஏற்றியிறக்கப்படும் பொழுது பொருட்கள் பழுதடையும் அதனால் இவற்றைக் கவனமாகப் பாவிக்க வேண்டும்.

**சாக்குகள்**

பெரும்பாலும் எமது நாட்டில் மரக்கறி வகைகளைப் போக்குவரத்துச் செய்வதக்கு சாக்குகளே பயன்படுத்தப்படுகின்றன.

சாக்குகள் மிகவும் மலிவானவை. நீண்ட காலம் உழைக்கக் கூடியவை. காற்று உள்ளே போகும் தன்மை கொண்டவை. இருந்தும் இவற்றில் பொருட்களை அளவுக்கதிகமாக நிரப்புவதால் பொருட்களுக்குச் சேதம் ஏற்படுகிறது.

எனவே இவற்றில் பொருட்களை அடைக்கும் பொழுது கவனம் செலுத்த வேண்டும். அன்றேல் பொருட்கள் சந்தையை அடையும் போது அவை பழுதடைந்த நிலையிலேயே காணப்படும்.

பொதுவாக பெட்டிகளில் அடைக்க வேண்டியவற்றை சாக்குகளிலும், சாக்குகளில் அடைக்க வேண்டியவற்றை பெட்டிகளிலும், கூடைகளில் அடைக்க வேண்டியவற்றை பெட்டிகளிலும், சாக்குகளிலும் அடைத்தால் பல எதிர்விளைவுகள் தோன்றுவதற்கும் இடமுண்டு.

**போக்குவரத்து**

மரக்கறிகளும், பழவகைகளும் இலகுவில் அல்லது விரைவில் பழுதடையும் தன்மை கொண்டவைகளாக இருப்பதால் அவற்றைச் சந்தைக்கு விரைவாகக்கொண்டு செல்ல வேண்டும். ஒருநாள் தாமதடைந்தாலும் கூட சில பொருட்கள் பழுதடைந்து விடுகின்றன.

எமது நாட்டில் பொரும்பாலான கமக்காரர்கள் தமது உற்பத்திப்பொருட்களைச் சந்தைக்கு தாமே சுமந்து செல்கிறார்கள் சிலர் சைக்கிளில் கொண்டு செல்கிறார்கள். சைக்கிள் மாட்டுவண்டிகள், வாடகை கார்கள், லொறிகள் ஆகியனவும் பொருட்களை ஏற்றியிறக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

அண்மையில் தூரங்களுக்கு பொருட்களைக் கொண்டு செல்லும் பொழுது கமக்காரர்கள் அதிகளவு சிரமத்தை எதிர்நோக்க வேண்டிய அவசியம் இருக்காது. உணவுப் பொருட்கள் மிகவும் கவனமாக அடைக்கப்பட்டிருந்தால் அவை குறுகிய இடத்தை அடையும் போது பழுதடைவது அல்லது கெட்டுப்போவது தவிர்க்கப்படுகிறது.


ஆனால், தூர இடங்களுக்குப் பொருட்களை அனுப்பும் போது அவை பழுதடையாமல் பாதுகாக்கப்பட வேண்டும். பொருட்களின் போக்குவரத்தைப் பொறுத்தளவில் சிக்கனம் கடைப்பிடிக்கப்பட்டால் அவற்றின் சந்தை விலை பாவனையாளருக்கும் கட்டுப்படியாகும்.

குறுகிய தூரத்தில் உள்ள சந்தைக்கு சிறிதளவு பொருட்களைக் கொண்டு செல்வதற்கு சைக்கிள், மாட்டுவண்டி, வாடகைக்கார் போன்றவற்றைப் பாவித்தால், செலவீனங்களைக் குறைக்கலாம். ஆனாலும், குறுகிய தூரத்திலுள்ள சந்தைக்கு அதிகளவு பொருட்களைக் கொண்டு செல்ல லொறியையே பாவிக்கவேண்டும். இதனால் போக்குவரத்து செலவீனங்களைக் குறைக்க முடிவதுடன் காலதாமதத்தையும் போக்க முடியும். எது எப்படி இருந்தாலும் தூர இடங்களுக்குப் பொருட்களை அனுப்புவதற்கு லொறிகளை அல்லது ரயில் போன்ற வாகனங்களைப் பாவிப்பதே சிறந்தது.

பொருட்களை ஏற்றி இறக்கும் போது கூடிய கவனம் செலுத்த வேண்டும். பெரும்பாலும் பொருட்கள் ஏற்றி இறக்கப்படும் போதே சேதமடைகின்றன.

# நெடுந்தீவு வைத்தியசாலை நிலையை அரசாங்க அதிபர் குழு நேரில் பார்வை!





நெடுந்தீவு —

கியூமெடிக்கா நிறுவனத்தால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் படகு கையளிப்பு நிகழ்வுக்கு வந்த யாழ். அரச அதிபர் அடங்கிய குழுவினர் நெடுந்தீவு மாவட்ட வைத்திய சாலைக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டுச் சென்றனர்.

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், அரச அதிபர் கே.கணேஷ், கியூமெடிக்கா நிறுவன இணைப்பாளர் சாம் இராஜசூரியர் மற்றும் நெடுந்தீவு நிர்வாக அரச அதிகாரிகள் ஆகியோர் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர்.

வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத்திட்டங்கள், நிரப்பப்பட வேண்டிய ஆளணிகள் மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பான மகஜர் ஒன்றை நெடுந்தீவு வைத்திய அதிகாரி எஸ்.சோதிநாதன், யாழ்.மாவட்ட அரச அதிபர், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரிடம் கையளித்தனர்.

தொடர்ந்து வைத்தியசாலையில் உள்ள நோயாளர் விடுதிகளைக் குழுவினர் பார்வையிட்டதுடன், சுகாதாரத் தொண்டர்களது நியமனம் தொடர்பாகவும் வைத்தியசாலை பணியாளர்களது தேவைகள் தொடர்பாகவும் அறிந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (113)

## மலசலகூடங்கள் சீரின்மையால் நோயாளர்கள் அசௌகரியம்

கைதடி —

கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலையிலுள்ள விடுதி மலசலகூடங்கள் சுகாதார முறைப்படி பேணப்படாமல் இருப்பது குறித்து விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களும், அங்கு சிகிச்சைக்காக வருபவர்களும் பெரும் அதிருப்தியடைந்துள்ளனர்.

இந்த மலசலகூடங்கள் சீரான முறைப்படி பராமரிக்கப்படாமல் உள்ளதால், துர்நாற்றம் வீசுவதுடன் அவற்றிலிருந்து நுளம்பு மற்றும் நோய்க்கிருமிகள் பரவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

சுத்தத்தையும், சுகாதாரத்தையும் பேண வேண்டிய வைத்தியசாலையில் இத்தகைய சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெற்றுவருவது வேதனையளிப்பதாக நோயாளர்கள் கவலை தெரிவித்தனர்.

## கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த கோரிக்கை

கைதடி —

கைதடி முதியோர் இல்லத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதால் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கட்டாக்காலி நாய்கள் முதியோர் விடுதிகளுக்குச் செல்வதுடன், முதியோருக்கும், இல்ல ஊழியர்களுக்கும் தொல்லைகளை ஏற்படுத்தி வருகின்றன. பெருமளவில் திரியும் இந்த நாய்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுத்து உதவுமாறு இல்ல அதிகாரிகள் தென்மராட்சி பிரதேச செயலரிடம் வேண்டுகோ[illegible] விடுத்துள்ளனர்.

## போதனாசிரியர் நியமனம்

புத்தூர் —

திருநெல்வேலி விவசாயப் பண்ணை உதவிமுகாமையாளராகக் கடமையாற்றிய க.பாலகிருஷ்ணன் புத்தூர் பிரதேச விவசாய போதனாசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புத்தூர் பிரதேசத்தின் பதில் விவசாய போதனாசிரியராகக் கடமையாற்றிய ம.யோகநாதன் - உரும்பிராய் பகுதி விவசாய போதனாசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக புத்தூர் மற்றும் உரும்பிராய் கமநல சேவை நிலையப் பிராந்தியங்களுக்கு விவசாய போதனாசிரியராக ஒருவரே கடமையாற்றி வந்தார். தற்பொழுது புத்தூர் மற்றும் உரும்பிராய் கமநல சேவை நிலையங்களுக்குத் தனித்தனியாக விவசாய போதனாசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாமனிதர் விக்னேஸ்வரனுக்கு நயினாதீவிலும் அஞ்சலி

நயினாதீவு —

நயினாதீவு மக்களும், பொது அமைப்புக்களின் ஒன்றியமும் இணைந்து மாமனிதர் விக்னேஸ்வரனுக்கு அவரது சொந்த ஊரான நயினாதீவில் உணர்வு பூர்வ அஞ்சலியைச் செலுத்தினர். அவரது புகழுடல் தீயுடன் சங்கமமான சமநேரத்தில் நயினாதீவில் விநாயகர் வீதிச் சந்தியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் - அமரரின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அஞ்சலி உரையும் நிகழ்த்தப்பட்டது. இதில் பொது நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கப்பட்டும், சோககீதம் இசைக்கப்பட்டும், மாமனிதருக்கு உணர்வுபூர்வ அஞ்சலி செலுத்தப்பட்டது.

## செய்தி வெளியிடுவது மட்டுமல்ல; செயலிலும் இறங்க வேண்டும்

### வாசகர் நோக்கு...

கடந்த 1995 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இராணுவ நடவடிக்கை காரணமாக வன்னிக்கு இடம்பெயர்ந்து வாழ்வியல் துன்பங்களை அனுபவித்து திரும்பவும் பிறந்த மண்ணுக்கு வந்த நான் - எனது தொழில் ரீதியான பாதிப்பையும், அதற்கான நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் இந்தப் பத்திரிகையில் குறிப்பிடலாமென விரும்புகிறேன்.

யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் நான் ஒரு பரிசாரகனாகக் கடமை புரிந்து வந்தேன் .12 வருடங்கள் கடந்த நிலையில் - 1995 இல் இடம் பெயர்ந்த போது எனக்கு கடமையைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது.

2002 இல் ஏ-9 பாதை திறக்கப்பட்டவுடன் ஓட்டமும், நடையுமாக யாழ்.திரும்பிய நான் எனது கடமையிடமான யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மீண்டும் கடமை புரிய உதவுமாறு வேண்டினேன். அங்கே சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்குமாறு எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி 2002 ஆம் ஆண்டு எனது மேன் முறையீடு ஒன்றைச் சுகாதாரத் திணைக்களத் தலைவருக்கு அனுப்பி வைத்தேன். அதற்கான பதிலை மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த எனக்கு 2004 ஆம் ஆண்டு அங்கிருந்து பதில் கிடைத்தது. பொது நிர்வாக ஆணைக் குழுவுக்கு மேன் முறையீடு செய்யுமாறு அதில் கேட்கப்பட்டிருந்தது.

திரும்பவும் ஒரு மேன் முறையீட்டுக் கடிதத்தை எழுதிப் பணிப்பாளரின் விதப்புரையுடன் 2004 இல் பொது நிர்வாக ஆணைக்குழுவுக்கு அனுப்பினேன்.

இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் அதற்கான பதிலெதுவும் எனக்குக் கிடைக்கப் பெறவில்லை.

தற்போது- அண்மைக் காலத்தில் பத்திரிகைச் செய்தியூடாக ஒரு விடயம் தெரியவந்தது. அதாவது - 1987 யூலை மாதத்தின் பின்னர் போர்க்கால அனர்த்தங்களினால் வேலையை இழந்து அதற்கு விண்ணப்பித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக்கான நிவாரண ஒழுங்குகள் மேற் கொள்ளப்படவுள்ளதாகவும், இந்த விடயம் சம்பந்தமான விளக்கம் 4/2006 இலக்க சுற்று நிருபத்தில் உள்ளதாகவும், சம்மந்தப்பட்டவர்கள் விண்ணப்பிக்குமாறும் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்திருந்தார்.

அதற்கிணங்கவும் மேன்முறையீடு ஒன்றை எழுதி, எனது கஷ்ட நிலையைக் குறிப்பிட்டு பணிப்பாளரின் உறுதிப்படுத்தலோடு சுகாதாரத் திணைக்களத்துக்கு முறையீடு செய்துள்ளேன்.


இங்கே நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், இதற்கான பதில் நடவடிக்கைகளோ அல்லது பதிலோ இன்னும் இரண்டு வருடங்கள் கடந்து தான் கிடைக்குமா என்பது தான்.

ஒரு அரச அலுவலகம் இத்தகைய நடவடிக்கைகளில் அசமந்தமாக இருப்பதென்பது கையூட்டுப் பெறுபவர்களுக்கு வாழ்வளிப்பதற்காக இருக்குமோ என்ற ஐயம் எழுகிறது.


தயவு செய்து இப்படியான விடயங்களை எமது நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டி என்போன்ற ஏழைகளுக்கு உதவினால் நல்லதாக இருக்குமல்லவா?

சி.மார்க்கண்டு,
தும்பளை தெற்கு,
பருத்தித்துறை.


## நிகழ்வுகளின் நிழல்கள்...




யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் எஸ்.எஸ்.நவரட்ணம் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்களைக் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை அதிபர் க.செல்வக்குமார் - மாணவி ஒருவருக்கு அன்பளிப்பாக வழங்குகிறார். (101)




யாழ் - பருத்தித்துறை வீதியில் சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு முன்னால் உள்ள மதகின் நடுவே காணப்படும் பாரிய குழியே இது. நாளாந்தம் பெருமளவு வாகனங்களும், மக்களும் பயணிக்கும் இந்த வீதியால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இது குறித்து அதிகாரிகள் இந்த வீதியை திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர். (110)



கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஊடாகப் பாதுகாப்பு ஆண்டை முன்னிட்டு நயினாதீவு குடும்ப முன்பள்ளி பாடசாலைகள் சேர்ந்து கடந்த 7 ஆம் திகதி நடத்தப்பட்ட பேச்சுத் திறன் காண் விழாவில் தலைமையுரையை தீவக முன் பள்ளி பிரதேச இணைப்பாளர் சுதாயினி நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். இந்தநிகழ்வு முதன்முதலாக நயினாதீவுப் பிரதேசத்தில் நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



சரசாலை பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாத போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் 05.04.2006 நூலக மண்டபத்தில் நடைபெற்றபோது - தென்மராட்சி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.செல்வராணி பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (29)



தியாகதீபம் அன்னை பூபதியின் 18 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு - கடற்புலிகளின் நிரோஜன் கடற்படைக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை கடற்படைக் கல்லூரி ஆசிரியர்களில் ஒருவரான வைதேகி ஏற்றிவைப்பதை முதலாவது படத்திலும், தமிழீழ தேசியக் கொடியை கடற்படைக் கல்லூரியைச் சேர்ந்த சீராளன் ஏற்றிவைப்பதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்ட தமிழீழ கடற்படை அணியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# கட்டுநாயக்க தாக்குதலில் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் பங்களிப்பு முக்கியமானது

## புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான்



கிளிநொச்சி—

கட்டுநாயக்க விமான நிலையத் தாக்குதலில் சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவு பாரிய பங்களிப்பு செய்துள்ளது என விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான் பாராட்டியுள்ளார்.

சாள்ஸ் அன்ரனி படையணியின் 15 ஆம் ஆண்டு நிறைவையொட்டி விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வ வானொலியான புலிகளின் குரலில் கடந்த திங்கட்கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சாள்ஸ் அன்ரனி படையணி உருவான வரலாறும், சாள்ஸ் அன்ரனி என்ற மகத்தான போர் வீரன் தலைவரின் மனதில் இடம்பிடித்த வரலாறும் எல்லோருக்கும் தெரிந்தது.

சாள்ஸ் அன்ரனியுடன் பழுகுகிற வாய்ப்பைப் பெற்ற அதிஸ்டசாலிகளில் நானும் ஒருவன். அவரது தொடக்க நாட்களில் விடுதலைக்கான வேட்கையை எந்த அளவுக்கு கொண்டிருந்தார் என்பதை நேரில் கண்டிருக்கிறேன்.

அவரது சொல்லுக்குக் கட்டுப்படக் கூடியவர்களாக எம்முடன் உறவை அவர் வைத்திருந்தார்.

சாள்ஸ் அன்ரனி என்ற மகத்தான சிறந்த போர் வீரன் பெயரில் இந்தப் படையணி உருவாக்கம் அமைந்துள்ளது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் முதலாவது படையணிக்குத் தனது பெயரை வைக்கும் அளவுக்கு தலைவரின் மனதில் சிறந்த இடம்பிடித்திருந்தார். இவரின் பெயருக்கு பெருமை சேர்க்கும் வகையில் படையணியினது செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

சாள்ஸ் அன்ரனியிடமிருந்த போராட்ட பற்றுணர்வு, விடுதலை பற்றிய தெளிவு இன்று சாள்ஸ் அன்ரனி படையணி போராளிகளுக்கு முன்னுதாரணமாகத் திகழும்.

இந்தப் படைப்பிரிவு உருவாக்கிய நாளில் தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் போராளிகள் இணைந்தார்கள். எமது புலனாய்வுத்துறை நடவடிக்கைகளிலும்கூட சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிப் பிரிவு போராளிகள் இணைந்து செயற்பட்டுள்ளனர். தேவைக்கேற்ப அவர்களது பங்கும், பணியும் எமது வெற்றிகளில் பேருதவியாக அமைந்துள்ளன.

எமது மறைமுக நடவடிக்கையில், குறிப்பாக கட்டுநாயக்க விமான நிலையத் தாக்குதல் நடவடிக்கையில் சாள்ஸ் அன்ரனி படையணியைச் சேர்ந்த மூன்று கரும்புலிகள் அந்த வெற்றியின் பங்களிப்பை வழங்கியிருந்தனர். வேறு கரும்புலி நடவடிக்கைகளிலும், எமது பொதுவான நடவடிக்கைகளிலும் கூட சாள்ஸ் அன்ரனி படையணி போராளிகளினது பங்கும், பணியும் பெரும் உந்துதலாக அமைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் கைதான பொலிஸாரை விளக்க மறியலில் வைக்க உத்தரவு!

கிளிநொச்சி—

மன்னாரில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் அத்துமீறிய போது காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட பொலிஸாரை 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 9 ஆம் திகதி மன்னாரில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதிக்குள் அனுமதியின்றி நுழைந்த காரணத்துக்காக கைது செய்யப்பட்ட மூன்று பொலிஸாரில் - ஜெனிவா பேச்சின் நல்லெண்ண சமிக்ஞையாக தேசிய தலைவரின் பணிப்பின் பேரில் இருவர் விடுதலை செய்யப்பட்டனர்.

மற்றைய பொலிஸ் கொன்ஸ்டபிள் மீதான விசாரணை தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதி மன்றத்தில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மார்ஷல் பயிற்சிப் பாசறையின் 2 ஆவது அணி வெளியேற்றம்

மன்னார்—

மன்னார் மாவட்டத்தில் 2 ஆம் லெப்டினன்ட் மார்ஷல் பயிற்சிப் பாசறையில் இரண்டாவது அணியினர் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர்.

பயிற்சி ஆசிரியர் பிரிந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்- பொதுச்சுடரை இலுப்பைக்கடவை கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கவிப்பிரியன் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை வெள்ளாங்குளம் பிரதேச கொள்கை முன்னெடுப்புப்பிரிவுப் பொறுப்பாளர் விதுரன் ஏற்றிவைத்தார்.

2 ஆம் லெப்ரினன்ட் மார்ஷலின் திருவுருவப்படத்துக்கு அவரது தந்தை விக்னராஜா ஈகச்சுடர் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் கருத்துரைகளை மன்னார் மாவட்ட தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் ஒளிவளவன் நிகழ்த்தினார்.

சிறப்புரைகளை இலுப்பைக் கடவை கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் டென்சில் நிகழ்த்தினார்.

# புதுக்குடியிருப்பு வைத்தியசாலையை தரமுயர்த்துமாறு மக்கள் கோரிக்கை

புதுக்குடியிருப்பு—

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் உட்பட பல பதவி வெற்றிடங்கள் நீண்டகாலமாக இருந்து வருகின்றமை மிகவும் வேதனைக் குரியவிடயம் என, முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜெயகுலராசா தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து தமது மேலதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதாகவும், மேலும் தற்போது கிராமிய வைத்தியசாலையாகவுள்ள இந்த வைத்தியசாலையைப் பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்த மாகாண அமைச்சூடாக மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (வெ)

# கலைவாணி முன்பள்ளியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி

வன்னேரிக்குளம்—

ஐயனார்புரம் கலைவாணி முன்பள்ளி இல்ல மெய்வல்லுநர் போட்டி - முன்பள்ளி இணைப்பாளர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை அக்கராயன் பிரதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவிப் பணிப்பாளர் சி.கோ.நல்லையா, ஐயனார்புரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் ஜெ.மனோரஞ்சிதம், மாதர்சங்கப் பொருளாளர் கு. சுந்தரலட்சுமி, பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவி பா.மல்லிகா, பிரதேச கட்டமைப்புத் தலைவர் ரெ. இலங்கேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை வன்னேரிக்குள பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் குட்டிமணி ஏற்றிவைத்தார். தமிழர் புனர்வாழ்வு கழகக் கொடியை உதவிப்பணிப்பாளர் சி.கோ.நல்லையா ஏற்றிவைத்தார்.

நிறுவனக் கொடியை திட்ட இணைப்பாளர் இ.துசிதரன் ஏற்றிவைத்தார்.

முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக் கொடியை முதன்மை ஆசிரியர் பு. மேரிதிரேசா ஏற்றிவைத்தார். முன்பள்ளிக் கொடியை முன்பள்ளி ஆசிரியர் சே.சந்திரவதனி ஏற்றிவைத்தார்.

விழாச்சுடரை ஐயனார்புரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் எஸ்.விஜயானந்தன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் ஆசியுரை ஐயனார்புரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் எஸ்.இராஜரட்ணம் நிகழ்த்தினார்.

சிறப்புரையை வைத்திய அதிகாரி எஸ்.முருகானந்தன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் நன்றியுரையை ஆசிரிய சங்க செயலாளர் அ.ராஜினி நிகழ்த்தினார். (கு)

# தொலைத்தொடர்பு துண்டிப்பு!

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 6 நாட்களாகத் தொலைத் தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதனால் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், கடற்தொழிலாளர்கள், பொதுமக்கள் தமது அன்றாட தொலைத்தொடர்புகளை மேற்கொள்வதற்கு வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (கு)

# அம்புலன்ஸ் அன்பளிப்பு

மருதங்கேணி—

சுனாமியால் கடுமையாகப்பாதிக்கப்பட்ட மருதங்கேணி பிரதேச மருத்துவமனைக்கு சுனாமி உதவித் திட்டத்தின் கீழ் அங்கிலியன் திருச்சபையால் நோயாளர் அம்புலன்ஸ் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக இந்த நோயாளர் காவு வண்டி வழங்கப்பட்டதாக, மருதங்கேணி மருத்துவமனை மருத்துவ அதிகாரி சின்னத்தம்பி சூரியகுமார் தெரிவித்தார். (கு)

# அடிக்கல் நாட்டுவிழா

முல்லைத்தீவு—

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு - கள்ளப்பாடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கென அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பாடசாலை அதிபர் இருதயநாதர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அடிக்கல்லை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.பார்த்தீபன் நாட்டிவைத்தார். (கு)

# வெப்பநிலை அதிகரிப்பு!

கிளிநொச்சி—

தமிழர் தாயகப் பகுதியில் தற்போது சராசரி வெப்பநிலை அதிகரித்துள்ளது.

வானிலை அவதான நிலையங்களின் தகவல்களின் படி சராசரி வெப்பநிலையான 33 பாகை செல்சியஸை விட அதிகமாகியுள்ளது.

வவுனியாவில் 35.8 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# இனியவாழ்வு இல்லத்துக்கு ஹைஏஸ் வாகனம் அன்பளிப்பு

கிளிநொச்சி—

இனிய வாழ்வு இல்லத்தின் பயன்பாட்டுக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கனடா கிளை "ஹைஏஸ்" வகை வாகனம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

இந்த நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நடுவப்பணியகத்தில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நடுவப்பணியக நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வெளிநாட்டுத் தொடர்புப் பிரிவின் பணிப்பாளர் எஸ்.பரமேஸ்வரன், இனிய வாழ்வு இல்ல நிர்வாகசபை உறுப்பினர்களான மா.வள்ளியம்மை, க.கலாவதி, செ.மேகநாதன் ஆகியோரிடம் வாகனத்தை கையளித்தார்.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் இரவிச்சந்திரன் மற்றும் ஏனைய வேலைத்திட்டப் பிரிவுப் பணிப்பாளர்கள், பணியாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இனியவாழ்வு இல்லமானது செவிப்புலனற்ற, மொழிப்புலனற்ற விழிப்புலனற்ற ஆண்,பெண் சிறுவர்களைக் கொண்டதொரு இல்லமாகும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையின்கீழ் இயங்கிவரும் வெண்புறா நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்டுவரும் இந்த இல்லத்தின் தேவையைக் கருத்திற்கொண்டே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கனடா கிளையின் நிதிப்பங்களிப்பில் இந்த வாகனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

*உறங்குவது போலும் சாக்காடு உறங்கிப்பின்*
*விழிப்பது போலும் பிறப்பு*

- திருக்குறள்.

## நமது நோக்கு

# அடிமேல் அடி!

தமிழர் தாயகப் பகுதிகளில் மீண்டும் கிளைமோர் குண்டுகள் வெடிக்கத் தொடங்கியுள்ளன. திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரனின் படுகொலையுடன் வடக்கு -கிழக்கில் ஆங்காங்கே இத்தகைய சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

ஜெனிவா பேச்சுக்களின் அடுத்த கட்டம் நடக்குமா இல்லையா என்ற கேள்வி எழுந்துள்ள தருணத்தில் - நடைபெறும் இத்தகைய தாக்குதல்கள் மீண்டும் சண்டை வெடிக்கப் போகிறதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அரசு - இத்தகைய தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகள்மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருக்கின்ற அதேவேளை - புலிகள் அதை முற்றாகவே நிராகரித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல்கள் யாரால் நடத்தப்படுகின்றன என்பதல்ல இப்போது முக்கியம், ஏன் நடத்தப்படுகின்றன என்பதை ஆராய்ந்து, அந்தக் காரணத்தை வலுவிழக்கச் செய்துதான் நிலைமை மோசமடைவதைத் தடுக்க முடியும்.

கிளைமோர் குண்டுகள் வெடித்ததும் புலிகள்தான் அதைச் செய்ததாகக் கூறி - தாக்குதலை நிறுத்துமாறு கோருகின்றனர். ஆனால், இந் தத் தாக்குதல்களின் அடிப்படை என்பது தமிழ்மக்களின் வெறுப்பும், கோபமும்தான் என்பதை அரசோ அல்லது சர்வதேச சமூகமோ புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

ஜெனிவா பேச்சுக்களின் போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தத் தவறியதன் விளைவே, மீண்டும் டிசெம்பர் - ஜனவரி யுகம் பிறக்கத் காரணமாகியுள்ளது.

அரசின் பராமரிப்பிலுள்ள துணை ஆயுதக் குழுக்கள் தான்தோன்றித்தனமான தாக்குதல்கள் தொடர்வதால் - தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் வெறுப்படைந்துள்ளனர்.

திருமலையில் மாமனிதர் விக்னேஸ்வரனின் படுகொலையுடன் தமிழ் மக்களுக்கு ஒன்று மட்டும் புரிந்துவிட்டது. அதாவது, சிங்கள அரசு துணை ஆயுதக் குழுக்களைக் கட்டுப்படுத்தவோ அல்லது அவர்களின் ஆயுதங்களைக் களையவோ போவதில்லை என்று.

அதுமட்டுமன்றி, ஆயுதக் குழுக்களின் முக்கியஸ்தர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கட்சிக் காரியாலயங்களைத் திறக்கும் அளவுக்கு அரசு அவர்களுக்கு ஆதரவு கொடுத்து அரவணைத்து வருகிறது.

இப்படிப்பட்டநிலையில், தொடர்கதையாக நிகழும் படுகொலைகளும் - ஆட்கடத்தல்களும் தமிழ் மக்களைப் பெரிதும் விரக்தியும், வெறுப்பும் அடையச் செய்திருப்பது உண்மையே.

இத்தகைய வெறுப்பும் கோபமும்தான் கிளைமோர் குண்டுகளாக வெடிக்கச் தொடங்கியிருப்பதாக கருதப்படுகிறது. தமிழ் மக்கள் ஒருபோதும் ஆயுதவழித் தீர்வில் காதல் கொண்டவர்களாக இருக்கவில்லை.

அமைதிவழித் தீர்வு என்பது அடைபட்டுப் போய் -சிங்களதேசம் அதை அவமதிக்கின்ற தருணங்களில்தான் தமிழ் மக்கள் தமது ஆயுதவழிப் போராட்டங்களைத் தீவிரப்படுத்தியிருக்கின்றனர்.

இப்போதும்கூட கிளைமோர் குண்டுகள் வெடிப்பதன் அடிப்படைக் காரணமாக இருப்பது - துணை ஆயுதக் குழுக்களின் படுகொலைகளும், மாமனிதர் விக்னேஸ்வரனின் அநியாய அழிப்பும்தானே தவிர - வேறேதுமாக இருக்க முடியாது.

ஜெனிவா பேச்சுக்கள் நடக்குமா இல்லையா என்ற இழுபறி இன்னொருபுறம் நடந்துகொண்டிருக்க - பொங்கி எழும் மக்கள் படையினரால் குண்டுகள் வெடிக்க வைக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்திருக்கின்றன. இத்தகைய சம்பவங்கள் படிப்படியாக வளர்ச்சியுற்று ஒரு தீவிர யுத்தமாகக் கூட வெடிக்கலாம். தீவிர யுத்தம் ஒன்று வெடிப்பதற்கான தோற்றுவாயாக துணைப் படைகள் விவகாரமே மாறிவிட்டது உண்மை.

இந்தநிலையில், தமிழ் மக்கள் இனிமேலும் சிங்கள அரசுகளின் வாக்குறுதிகளின்மீது நம்பிக்கை வைத்திருக்க முடியாத நிலையை அடைந்து விட்டார்கள்.

அடிமேல் அடி அடித்தால்தான் அம்மியும் நகரும் என்பதுபோல -சமாதானமும் அப்படித்தான் வருமோ எனச் சிந்திக்க வேண்டிய அளவுக்கு தமிழ் மக்களை சிங்கள அரசு சிந்திக்க வைத்து விட்டது.

அதன் விளைவே இத்தகைய சம்பவங்களாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

நாடும் நடப்பும்



# தாயகத்தில் தடையற்ற மின்னுற்பத்தி வேண்டும்-சாலை வசதியும் வேண்டும்

## ஊர்சுற்றியார் பார்வையில்

தமிழருக்கும்- சிங்களவருக்கும் நாளை புத்தாண்டு பிறக்கிறது. புதுவருடக் கொண்டாட்டத்துக்காக எங்கே பார்த்தாலும் புதிது புதிதாகத் துணிகளும், ஆடைகளும் குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாமான்களும் குவிந்து கிடக்கின்றன. இதே சமயம் வடக்கிலும் - கிழக்கிலும் வாழும் மக்கள் எந்த நேரம் என்ன நடக்குமோ என்ற அச்சத்துடனேயே புத்தாண்டுப் பிறப்பை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். குண்டுகள் வெடிக்குமா, துப்பாக்கிகள் சுடுமா? என்ற அச்சத்துடனேயே இங்கு மக்கள் புதுவருடத்துக்குப் புத்தாடைகள் வாங்குவதற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். தமிழ் சிங்கள புதுவருடத்தோடு நாட்டில் சமாதானம் தோன்றும் என்று பலரும் எதிர்பார்த்து இருந்தனர். இன்றுள்ள நிலைமையைப் பார்க்கும் போது புத்தாண்டுடன் நாட்டில் சமாதானம் தோன்றுவதற்கான அறிகுறிகளையே காணோமே என்று சொன்னபடி வந்தார் நண்பர் பரதேசியார்.

மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இதனால் நாடு நகரங்களிலெல்லாம் இடநெருக்கடிகளும் அதிகரித்தே வருகிறது. எங்கே பார்த்தாலும் புதிது புதிதாக வீடுகளும், கடைகளும், மண்டபங்களும் எழுந்து கொண்டே இருக்கின்றன. புதிய புதிய வடிவத்தில் கட்டடங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. மக்கள் குடியிருப்புப் பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்காக தொடர் மாடிக் குடியிருப்புகள் இப்பொ ழுது பெருகிக் கொண்டிருக்கின்றன. கொழும்பில் குறிப்பாக குட்டி யாழ்ப்பாணம் என்று வர்ணிக்கப்பட்ட வெள்ளவத்தைப் பகுதியில் முன்பெல்லாம் தனித்தனியாக வீடுகள் இருந்தன. தோட்டங்களும், பூஞ்செடிகளும் வீட்டை அலங்கரித்து நின்றன. சிலவளவுகளில் கத்தரி, வெண்டி போன்ற காய்கறிப்பயிர்களும் இருந்தன. இன்று வெள்ளவத்தையில் உள்ள வீதிகளிலெல்லாம் தொடர்மாடிக் கட்டடங்கள்தான் அலங்காரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. இந்தத் தொடர்மாடி வீடுகளிலுள்ளவர்கள் புத்தாண்டுக் கொண்டாட்டத்தை ஒற்றுமையாகக் கொண்டாடும்போது பார்ப்பதற்கு அழகாகத்தானிருக்கும் என்று நான் சொன்னேன்.

தொடர்மாடிக்கட்டடங்கள் உறுதியானவையாக இருக்க வேண்டும். அவை நல்லமுறையில் பராமரிக்கப்படவேண்டும். அதில் வாழும் மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டும். பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களும், பல மொழி பேசுபவர்களும் இந்தத் தொடர்மாடிக் குடியிருப்புகளில் வாழ்வார்கள். இவர்களுக்கிடையில் பேதங்கள் அதிகம் இருக்காது. பிள்ளைகள் எவ்வித பேதமுமின்றி சேர்ந்து விளையாடுவார்கள். இதனால் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கு தொடர்மாடிக் குடியிருப்புகள் நல்ல முன்மாதிரி என்று நான் நினைக்கிறேன் என்று நண்பர் பரதேசியார் சொன்னார்.

யாழ்ப்பாணத்தில் குடியிருப்புப் பிரச்சினைகள் இப்பொழுது தலைகாட்டிக் கொண்டிருந்தாலும், தொடர்மாடிக் குடியிருப்புகள் இங்கு இன்னும் பரவத் தொடங்கவில்லையே ஏன்? என்று கேட்டேன்.

சில மக்களுக்கு இப்படி நெருக்கமாக வாழும் பழக்கம் வெகு குறைவு. இடநெருக்கடி ஏற்பட்டாலும்கூட, கூடியவரையில் இப்படியான மக்கள் தங்கள் சொந்த நிலம் என்று கருதும் இடத்தில் தொடர்மாடிக் குடியிருப்பை விரும்புவது குறைவு. ஆனால், இதே யாழ்ப்பாண மக்கள்தான் இப்பொழுது வெள்ளவத்தையில் தொடர்மாடிகளில் குடியிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் ஒரு கட்டடத்திலேயே சிறியசிறிய அறைகளில் பல குடும்பங்கள் நெருங்கி வாழ்கின்றன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் ஒரே வீட்டில் ஒவ்வொரு அறைகளில் வாழ்கிறார்கள். இதுவும் அவர்களுக்குப் பழக்கப்பட்ட வாழ்க்கையாகி விட்டது. இவர்கள் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். இதேசமயம் தொற்றுநோய் யாருக்காவது பீடித்தால் அந்த வீட்டிலுள்ள பலரையும் தொற்றிக்கொள்வதுமுண்டு. தமிழ் நாட்டை அண்டிய கேரளத்தில் தனித்தனி வீடுகளும், வளவுகளும் யாழ்ப்பாணத்தில் போல்தான் இருக்கும். மேல் நாடுகளில் எங்கே பார்த்தாலும் அடுக்குமாடித் தொடர்களாகவே காட்சியளிக்கும். ஆனால், டென்மார்க் போன்ற நாடுகளில் யாழ்ப் பாணத்தையும், கேரளத்தையும் போன்று தனித்தனி வீடுகளும், வளவுகளும் நல்ல சுகாதாரமாக இருக்கின்றன என்று பரதேசியார் சொன் னார்.

யாழ்ப்பாணம் மட்டுமல்ல வடபகுதியிலும் இப்பொழுது இடநெருக்கடி அதிகரித்து வருகிறது. இது மட்டுமல்ல காணி விலைகளும், உச்சத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறது. போக்குவரத்துக்குப் புதுப்புது பிரச்சினைகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. கொழும்பிலும் அதைத்தொடர்ந்து தென்னிலங்கை, மத்திய இலங்கைப் பகுதிகளிலும் வீதிகள் புதிதுபுதிதாகப் போடப்பட்டு வருகின்றன. கட்டடங்களை இடித்துத் தள்ளிப் புதிய வீதிகள் அமைக்கப்படுகின்றன.

ஏன் இந்தியாவிலும், தமிழ் நாட்டிலும் மட்டுமல்ல ஆந்திரா, கன்னடம் மலையாளம் ஆகிய மாநிலங்களிலெல்லாம் கட்டடங்கள் இடித் துத் தள்ளப்பட்டுப் புதிய விஸ்தாரமான வீதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று சொன்னேன்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு சாலை வசதிகள் நல்ல முறையிலிருக்க வேண்டும். துறைமுகங்கள் நல்ல முறையில் இருக்க வேண்டும். இந்தக் காலத்தில் நாட்டில் மின்சார உற்பத்தி இருக்க வேண்டும். தங்குதடையற்ற மின்சாரமிருந்தால்தான் தொழில் வளம் பெருக முடியும். நாட்டில் பொருள்களின் உற்பத்தியும் அதிகரிக்கும். பொருள்களின் உற்பத்தி அதிகரித்தால் தான் ஏற்றுமதி வர்த்தகமும் அதிகரிக்கும் என்று பரதேசியார் சொன்னார்.

இப்பொழுது தென்னிலங்கையில் மின்னுற்பத்தியை அதிகரிப்பதற்கு நுரைச்சோலையில் மின்னுற்பத்திக்கு முயற்சி செய்கிறார்கள். இதேசமயம், மலைநாட்டில் மேல்கொத்மலை நீர்வீழ்ச்சியில் நீர் மின்னுற்பத்தியும் மேற் கொள்ளப்படவிருக்கிறது. இங்கு வடக்குக் கிழக்கில் மின்னுற்பத்தியை அதிகரிப்பதற்கு வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். தமிழ் நாட்டின் தென்கரையோரப் பகுதியில் நாகர்கோவில், நாங்குநேரி, ஆரல வாய்மொழி ஆகிய பகுதிகளில் காற்றாலைகள் பல நிறுவப்பட்டிருக்கின்றன. காற்றாலைகளிலி ருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் காற்றாலைகளிலிருந்து அதிகமான மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றதாம். வடக்கிலும் - கிழக்கிலும் கூட நாங்கள் காற்றாலைகள் நிறுவி மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய இடங்கள் நிறையவே இருக்கின்றன. நாம் இப்பொழுதே காற்றாலைகள் நிறுவி மின்னுற்பத்தியை அதிகரிப்பதற்கு வழிசெய்ய வேண்டும் என்று சொன்னேன்.

நிச்சயமாக மின்னுற்பத்தியை நமது தாயகத்தில் அதிகரிக்கச் செய்யவேண்டும். இதே சமயம் சாலை வசதிகளையும் பெருக்கவும் போக்குவரத்துத் தங்குதடையின்றி நடைபெறுவதற்கு வசதி செய்ய வேண்டும். மேல்நாடுகளில் தங்குதடையற்ற மின்சாரம் தேவையான அளவு கிடைக்கிறது. இதனால் அங்கு புதிய உற்பத்திகள் கண்டறியப்பட்டு தொகையாக உற்பத்தி செய்கிறார்கள். இவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. அங்கு துறைமுகங்களும் நவீன மயப்படுத்தி ஏற்றுமதி, இறக்குமதிகளுக்கு பாய்ப்பளிக்கப் படுகின்றன. இங்கு நமது தாயத்திலும் துறைமுகங்கள் நவீன மயப்படுத்தவேண்டும். இங்கு முன்னர் நல்ல முறையில் நடந்த உற்பத்திகளை மீண்டும் தொடங்கி உற்பத்தி செய்வதுடன் மேலும் பனம் பொருளிலிருந்து புதியபுதிய பொருள்களை உற்பத்தி செய்யவும் வழி காணவேண்டும். ஒருகாலத்தில் சிறந்த ஆடைகள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டதுண்டு. அவற்றை மீண்டும் உற்பத்தி செய்வதற்கும் மேலும் நமது நாட்டு மூலப்பொருள்களிலிருந்து புதிய புதிய பொருள்களை ஏற்றுமதி செய்வதற்குரிய பொருள்களை உற்பத்தி செய்யவும் நாம் முன்வரவேண்டும். நமது தாயகத்தின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் நாம் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாக ஈடுபட்டு வெற்றிகாண வேண்டும் என்று சொல்லிக் கொண்டு பரதேசியார் புறப்பட்டார்.

நமது தாயகத்தில் நாம் புத்தாண்டைச் சிறப்பாகக் கொண்டாடும் காலத்தை எதிர்பார்த்திருப்போம் என்று நின்று சொல்லி விட்டுப்போனார்.

**புலிகளின் குரல் வானொலியின் 'அரசியல் அரங்கம்' நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்திய உரை**

# தொடரும் இனப்படு கொலையை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்லும் காலம்

தாயகத்தில் காரிருள் இன்று மீண்டும் சூழ்ந்திருக்கிறது. கனத்த குரலுடன் உங்களுடன் நான் உரையாட வேண்டியதாக இருக்கிறது.

வெகுண்ட மனதுடனும், மிகுந்த துன்பத்துடனும் நாங்கள் இன்று நடமாடிக் கொண்டிருக்கிறோம் திருமலையில் இன்னொரு பலி எடுக்கப்பட்டாகிவிட்டது.

வேள்வித்தீயில் இன்னொரு ஆகுதியாகி என்றாகிவிட்டது. உன்னதமான மனிதர்களை நாம் இழந்து கொண்டே வருகின்றோம்.

இந்தநிலையை எந்தவிதம் உங்களுக்கு கூறுவது என்று நான் மிகுந்த துன்பத்துடன் சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது.

எம் அன்புக்குரிய கவிஞர் சு.வில்வரத்தினம் பாடியது போன்று அவருடைய கவிதையில் ஒரு வரியை கூறி எங்களுடைய துயரத்தையும், உங்களுடைய துயரத்தையும் ஆற்றிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

பாலமாய் பிளந்து எம் நெஞ்சம்
கரை கொள்ளாத் துயர் திரண்டு
உயர்ந்து வந்து போகின்றது.
விடிகிறது காலையா
விடிகிறது இந்த நிலம்
மனதில் ஓலம் தெளியா நீள்வின்
துயரின் மற்றுமோர் வடிவம் பிறக்கிறது.

என்ற அந்த கவிதை வரிக்கு ஊடாக துயரத்தை நான் உங்களுடன் பங்கிட்டுக் கொள்கிறேன்.

துயரத்தை மட்டும் பேசிக்கொண்டிருப்பது எங்களால் முடியாத காரியமாகி விட்டதால், துயரம் தாண்டியும் பேசவேண்டியதாகியிருக்கிறது என்பதுடன், இன்றைய அரங்கத்தில் எங்களுடைய கருத்துக்களை உங்கள் முன்பாக வைப்பதற்கு நான் ஆயத்தமாகிறேன்.

திருமலைப் பெருமனிதன் விக்னேஸ்வரனுடைய படுகொலை மூலம் எமக்கு எதிரி உணர்த்த முயல்வது என்ன? எமக்கு எதிரி இந்தப் படுகொலை மூலம் கூறவிரும்புகின்ற அந்தச் செய்தி என்ன? என்ற அந்தக் கடுமையான,துன்பகரமான ஒரு யதார்த்தத்துக்கு நாங்கள் வரவேண்டியதாக இருக்கிறது.

எதிரி எங்களுக்கு இப்போது செய்திகளை இத்தகைய படுகொலைகள் மூலம் தான் கூறிக் கொண்டு வருகின்றான்.

மிக நீண்டகாலமாக எதிரியினுடைய செய்திகள் என்பது படுகொலைகளுக்கு ஊடாகத்தான் கிடைத்தது என்பது எங்கள் எல்லோருக்கும் நன்கு தெரியும்.

இந்த முறை கூற வருகின்ற செய்தி என்ன என்பது மிகக்காத்திரமானதும், மிகக் கடுமையானதும், மிகச் சிக்கலானது மானதாக எங்கள் முன்பாக வந்து விரிகின்றது.

என்ன எதிரி கூற விரும்புகின்றான்? திருமலை மண் தனது சொந்த மண் என்று கூற விரும்புகின்றானா?

திருமலை மண் தமிழ் மக்களுடைய மண், தமிழ் பேசும் மக்களுடைய மண் என்று நீண்டகாலமாக விக்னேஸ்வரன் தனது ஓயாத குரலால் அரற்றி, ஓலமிட்டு வாதாடிய அந்தக் குரலை நசுக்குவதன் ஊடாக திருமலையில் - நடராஜன் கொடியேற்றிய போது, சுட்டு வீழ்த்திய அந்த வரலாற்றை மீண்டும் நினைவூட்ட சிங்களவர்கள் விரும்புகிறார்களா?

ஆகவே அந்த வகையில் பார்க்கப் போனால்-

திருமலை என்பது சிங்களவர்களுடைய மண் என்பதற்கான சான்றாக இந்த விக்னேஸ்வரனுடைய கொலையை நிகழ்த்திக் காட்ட அவர்கள் விரும்புகின்றார்களா? என்பது ஒரு புறமிருக்க இரண்டாவது ஒரு முக்கியமான விடயம் -

அண்மைக்காலமாக இரட்டை வேடம் போட்டு வந்த சிங்களத்தரப்பு இப்போது மிகுந்த லாவகமாக, நேரடியாகவே தன்னுடைய இரட்டை வேடத்தை கலைத்து பேச்சுவார்த்தையில், அமைதித் தீர்வில் தனக்கு நம்பிக்கை இல்லை என்பதை மிகத்துலாம்பரமாக வெளிப்படுத்தக் கூடிய சாட்சியாக இந்தப் படுகொலை நிகழ்த்தப் பட்டிருக்கிறதா?

அதாவது - தமிழ் மக்கள் பலவீனப்பட்டுப் போய்விட்டார்கள்.

அவர்களைப் பாதுகாக்கின்ற அந்த அமைப்பு போரிடக் கூடிய ஆற்றலை இழந்துகொண்டு போகின்றது என்ற செய்திக்கு ஊடாக.

எமது தேசியத் தலைவர் கூறியது போன்று - பலமற்ற மக்களைக் கண்டால் எதிரி பாய்ந்து பாய்ந்து தாக்குவான் என்பதைப் போல், எங்கள் மீது நிகழ்த்தப்படப் போகின்ற படுகொலைகளுக்கு முன்னோடியாக இந்தப் படுகொலையை சிங்கள எதிரிகள் எம்மீது கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார்களா?

உண்மையிலேயே விடுதலைப் புலிகளினுடைய போரிடும் ஆற்றல், தமிழ் மக்களின் நெஞ்சுரம் என்பன தொடர்பாக கணிப்புகளை தவறாக எடுத்துக் கொண்டு, அந்த அடிப்படையில் செய்கின்ற ஒரு முயற்சியாக இந்தப் படுகொலையை எங்களுக்குச் சுட்டிக்காட்ட அவர்கள் விரும்புகின்றார்களா? என்பது இன்னொரு பக்கம் இருக்கிறது.

மூன்றாவது - முக்கியமானதும், மிக அவசியமானதுமான செய்தி என்னவென்று கூறினால் - சர்வதேசத்துக்கு இந்தக் கொலைகள் மூலம் விடுக்கப்படுகின்ற செய்தி என்ன?

அதாவது இந்தப் படுகொலைகள் மூலம் சர்வதேச அமைதி முயற்சியாளர்களுக்கு சிங்களம் கூறும் செய்தி என்ன?

அதுவும், குறிப்பாக புதிய சமாதானத் தூதுவர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து எஞ்சியிருக்கின்ற சிலவார காலத்துக்குள்ளாவது சிங்களம் - தன்னுடைய போக்கை மாற்றி, முதல் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்று கூறிய சொல் காய்வதற்கு முன்பாக, பௌயர் போன்றவர்கள் இந்தத் தீவிலிருந்து செல்கின்ற அந்தக் கால கட்டத்தில் இந்தப் படுகொலை நிகழ்த்தப்பட்டதன் ஊடாக சிங்களம் கூற வருகின்ற செய்தி என்னவெனில் -

அமைதிப் பேச்சினூடாகவோ விடுதலைப் புலிகள் அல்லது தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வையும் முன்வைப்பதன் ஊடாகவோ இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு சிங்களம் தயாராக இல்லை என்பதை மிகத் தெளிவாக உலகத்துக்கு முதலில் உணர்த்துகிறதா?

சிங்களத்தரப்பு ஒரு போதும் தனது இராணுவத்தரப்பு மேலாண்மையை எந்த வகையிலும் வைத்துக்கொள்ளாமல், இந்தப் பேச்சுக்களின் மீது நம்பிக்கையிழந்து, இறுதியாக உலகத்தரப்பையும் தன்னோடு சேர்த்து இந்த மாதிரியான பேச்சுக்களை கைவிட்டு, நாங்கள் அரசியல் ரீதியான பேச்சுக்களுக்கு செல்வோம் என்ற ஒரு நிலையை எடுப்பதற்கான ஒரு முன்னேற்பாடாக உலகிற்கு இதனை உணர்த்துவதற்காக இந்தப் படுகொலை நிகழ்த்தப் பட்டிருக்கிறதா?

உங்களுக்கு தெரியும் அண்மையில்



பௌயர், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமைச் சந்தித்த பின்னர் ஹக்கீம் கூறியது என்னவெனில்,

இனிமேல் நோர்வேத் தரப்பு புதிய அணுகு முறையைக் கைக்கொள்ளப் போகின்றது. அதாவது சாத்தியமற்ற விடயங்களை கைவிட்டு, சாத்தியப்படுத்தக் கூடிய விடயங்களைப் பற்றிப் பேசலாம் என்று நினைக்கின்றது. எங்கள் தொனியில் பல கருத்துக்களைக் கூறுகின்ற போது, எங்களுக்கு இந்த நிலைப்பாட்டினுடையதொனி சந்தேகமாக மனதில் விழுவது தவிர்க்க முடியாதது ஆகிறது என்பது இந்தக் கொலைக்கு ஊடாக உலகுக்கு கூறப்படுகின்றதா?

அதாவது எங்களுடைய போக்கை நாங்கள் ஒரு போதும் மாற்றிக்கொள்ளமாட்டோம். நீங்கள் தான் மாற்றிக் கொள்ள வேண்டும். புலிகள் தான் மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற செய்தியை விக்னேஸ்வரன் கொலைக்கு ஊடாக கூறுதன் மூலம், அவருடைய படுகொலை என்பதை ஒரு வரலாற்றினுடைய திருப்பமான நிகழ்வாக எங்களுக்கு ஆற்றிக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பையும் கூட சிங்களம் தருகின்றது என்று நாங்கள் கூறிக் கொள்ளலாம்.

அப்படியாக இந்தப் படுகொலையின் சூழ்ச்சிகளும், நெகிழ்ச்சிகளும் விரிந்து கொண்டு போகின்றது.

இன்னொரு முக்கிய விடயத்தையும் உங்களுடன் உரையாடலாம் என்று நினைக்கிறேன்.

எங்கள் ஆழ்மனதில் உள்ள பெரிய சஞ்சலத்தை, ஒரு அச்சத்தை பெரிய காரிருள் சூழ்ந்த ஒரு பெரிய கலக்கத்தை நாங்கள் இங்கே கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

இந்தப் பேச்சுவார்த்தை என்பது கூட தமிழ் மக்களின் இனப்படுகொலையின் இன்னொரு வடிவமாக மாறிக்கொண்டு வருவதாகவே நாங்கள் பார்க்கிறோம்.

சிங்களத்தினுடைய மிக நீண்ட சதித் திட்டத்தின் ஒரு அங்கமாகத்தான் இந்தப் பேச்சுவார்த்தையும் அமைகிறது என்பது தான் இன்று எங்களுடைய, தமிழ் மக்களினுடைய நிலையாக மாறியிருக்கிறது. இனப் படுகொலை என்பது ஜெனோசைட் என்ற ஆங்கிலச் சொல்லின் ஒரு தமிழ்மொழி பெயர்ப்பாக இருக்கிறது.

அந்த ஜெனோ என்ற கிரேக்க சொல்லுக்கு - இனம், குழு,குடும்பம் என்ற கருத்தும் சைட் என்பதற்கு படுகொலை என்ற கருத்துமாக அந்தச் சொல்விரிகிறது.

இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் யூத மக்கள் படுகொலையோடு இந்தச் சிக்கல்கள் ஆரம்பித்தன.

போலந்து நாட்டைச் சேர்ந்த ஒரு யூத அறிஞனான ரசில் லிங்கின் என்பவரே இந்த ஜெனோ சைட் என்ற சொல்லை முதலில் பயன்படுத்தியிருக்கிறார்.

அவர் கூறுகிறார் -

உடனடியாக கொல்கின்ற திட்டம் என்பதற்கு அப்பால் திட்டமிட்டு, ஒழுங்குபடுத்தி மிக நீண்டகாலத்துக்கு கலாசார, இன, அரசியல், தனிநபர் படுகொலை எல்லாவற்றையும் இணைத்த ஒரு செயற்பாட்டின் ஒரு தொகுப்புதான் 'இனப்படுகொலை' என்றார் அவர்.

உலகிலே இனப்படுகொலைகளை நிகழ்த்தி இன்று குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தியுள்ள ருவாண்டா, லைபீரியா,பொஸ்னியா, முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசுகள் என்று நீள்கின்ற இந்த வரலாற்றில் நாங்கள் இணைந்து கொள்ள வேண்டிய தேவை வருவதாக நாங்கள் நினைக்கிறோம்.

இந்தப் படுகொலையின் விளக்கம் என்ன? விவரணம் என்ன?

1948 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் திகதி ஐ.நா. சபையுடைய மாநாடு ஒன்று நடைபெற்றது.

இனப்படுகொலையின் குற்றங்களை நிகழ்த்தியோர் மீது தண்டனை விதித்தலும், அதனை தடுத்தலும் தொடர்பான மாநாடு அது.

அந்த மாநாட்டின் ஊடாகத்தான் இது தொடர்பான சட்ட, திட்டங்கள் தயாரிக்கப்பட்டு,அந்த இனப்படுகொலையின் விளக்கங்கள் கொடுக்கப்பட்டன.

அதன் பின்னர் 1951 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி இது சர்வதேச சட்டமாக இந்த இனப்படுகொலை நிகழ்த்தப்படுவோர் மீதான தண்டனை விதித்தல் தொடர்பான ஏற்பாடுகள் நடைமுறைக்கு வந்தன.

இதில் முதலாவது, முக்கியமான வரைவிலக்கணம் என்னவெனில் -

பின்வருகின்ற ஏதாவது ஒரு செயற்பாடு அதாவது உள்நோக்கத்தோடு -

குறிப்பிட்ட ஒரு குழுவை, ஒரு இனத்தை, மதம் சார்ந்தவர்களை, ஒரு தேசியத்தை எதுவாயினும் அதனை முழுமையாகவோ, பகுதியாகவோ, முற்றாக அழிப்பதற்கான ஒரு திட்டத்தோடு நிகழ்த்தப்படுகின்ற பின்வரும் ஐந்து வகையான குற்றங்களை இனப்படுகொலைகளுக்குள் உட்படுத்துகின்றனர்.

அதில் முக்கியமானது -

முதலாவது அந்தக் குழுமத்தின் உறுப்பினர்களை கொல்லுதல், இரண்டாவது அந்தக் குழுமத்தின் உறுப்பினர்களுக்கு உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ பாதிப்புகளை ஏற்படுத்துதல்.

மூன்றாவது - அதனுடைய பௌதீக உடமைகளை முற்றாகவோ, பகுதியாகவோ சேதமாக்குதலுக்கு அப்பால்,உயிர் வாழ்தல் நிலையை மிகுந்த ஆபத்துக்கு உள்ளாக்குதல். அதற்கு அப்பால் அதனுடைய பிறப்பு வீதத்தை மட்டுப்படுத்துதல்,குழந்தைகளை இல்லாது செய்தல் அல்லது கையகப்படுத்தி வேறிடங்களுக்கு அகற்றுதல் என்று கூறி ஒரு இனத்தினுடைய குடித்தொகைப் பரம்பலை மட்டுப்படுத்துகின்ற சில முயற்சிகள் இனப்படுகொலைகளுக்குள் அடங்குவதாக கூறுகின்றார்கள்.

ஆக தனிநபர் படுகொலைகள் கூட இனப்படுகொலையின் சதித்திட்டத்தினுடைய அம்சத்தை மனதில் கொண்டு நிகழ்த்தப்படுமாயின் அதுவும் இனப்படுகொலை என்று ஆகிறபோது -

இன்று தமிழ் மக்கள் மீது நடத்தப் படுகின்ற அத்தனை படுகொலைகளும் திட்டமிட்டு, இனத்தினுடைய மாண்பை, மகிமையை அழிக்கச் செய்து மண்ணைப் பறிக்க செய்யப்படுவதால், இதுவும் இனப் படுகொலையினுடைய ஒரு வடிவம் என்று தமிழ் மக்களாகிய நாங்கள் அதனைப் பற்றிக் கூற வேண்டிய காலகட்டம் இன்று வந்து விட்டது என்பதால், இந்தக் கருத்தை புலம் பெயர் வாழ் மக்கள் மத்தியிலும் விதைக்க விரும்புகிறோம்.

நாங்கள் இன்று இந்தப் பிரச்சினைகளை எடுத்துக் கூறுகின்ற தளங்கள் எல்லாம் மாறிக் கொண்டு செல்வதை அன்புக்குரியவர்களே நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும் என்ற நாங்கள் தாழ்மையாக வேண்டிக்கொள்கிறோம்.

இங்கே உள்ள துயரம் என்னவெனில் - ஜெனோசைட் என்று உலகம் ஒவ்வொரு முறையும் கூறும் போது, அது மீண்டுமொரு முறை நிகழ்த்தப்படக்கூடாது என்று சொல்கிறது. 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னால் யூதப் படுகொலை மீதான நியூரம் பேர்க் அல்லது நூரம்பேர்க் விசாரணை மன்றங்கள் அமைத்ததற்கு அப்பால், 2002 ஆம் ஆண்டு ஒரு முக்கிய நிகழ்வு நடந்தேறியது. இந்தக் கொடுமைகளின் விளைவாக - உலகத்தின் மனச்சாட்சி உலுக்கப்பட்டதன் விளைவாக ஐ.சி.சி. என்ற சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.

இந்த நீதிமன்றம் பாதிக்கப்பட்டவர்களுடைய இறுதிப் புகலிடமாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றம் உருவாக்கப்பட்ட போது அமெரிக்கா தன்னை விசாரணைக்குட்படுத்தக் கூடாது என்று நடவடிக்கைகள் எடுத்தது. இன்று அந்த நீதிமன்றம் என்பது நாடுகளின் உள் விடயங்களில் தலையிடக்கூடிய ஒரு நிலைமை உருவாகியுள்ளது.

அதாவது உள்நாட்டில் உள்ள நீதிமன்றங்கள் நீதியை வழங்க முடியாதவிடத்து அல்லது விரும்பாதவிடத்து அந்த நீதியை வழங்குவதற்கான கடைசிப் புகலிடமாக சர்வதேச நீதிமன்றம் மாறியிருப்பதால் தான், உலகத்திலே அது தொடர்பான அச்சம் தோன்றியிருப்பதைப் பார்க்க முடியும்.

ஆகவே இந்த நீதிமன்றம் என்பது கூட எங்களைப் பொறுத்தவரையில் சிங்களத்துக்கான அடுத்த வரவேற்பு இடமாக, சிங்கத்தின் அடுத்த பயணத்தின் அடுத்த எல்லையாக நீதிமன்றத்திலே நிறுத்தப்பட வேண்டிய தேவை அதிகரித்தால் மட்டுமே சிங்களம் இனிமேல் தன்னுடைய போக்கை மாற்றிக்கொள்ள வேண்டிய அபாய நிலைக்குச் சென்றுவிட்டது.

எங்களைப் பொறுத்தவரையிலே எங்கள் மீது நிகழ்த்தப்படுகின்ற இந்தக் குற்றங்கள் எல்லாமே ஒரு இனப்படுகொலையினுடைய நீட்சியாக இருப்பதை உலகத்துக்கு முன்னால் உரத்துச் சொல்லவேண்டிய காலகட்டம் எங்களை நோக்கி நகர்வதைப் பார்க்கிறோம்.

ஏனென்றால் - சர்வதேசம் தலையிட்டும், ஒரு பேச்சுவார்த்தையை நடத்தியும் நாங்கள் விட்டுக் கொடுத்துச் செயற்பட்ட போதும் கூட, இந்த இனப்படுகொலை எண்ணங்கள் மாறாத நிலையில் நிச்சயமாக சிங்களம் ஒரு போதும் மாறாது என்பது எங்களுக்கு நன்றாகத் தெரிகிறது.

இந்த இடத்தில் அண்மையிலே வெளிவந்த ஒரு நூல்பற்றிப் பேசலாம் என்று நினைக்கிறேன். நாசிகளுடைய அதாவது ஹிட்லருடைய யூத இன ஒழிப்புத் தொடர்பான ஒரு நூல் - 'லோறன்ஸ் றீஸ்' என்ற பி.பி.சியின் ஆய்வுத் தயாரிப்பாளர் எடுத்த நிகழ்ச்சிகளூடாக தொகுக்கப்பட்ட வரலாற்றைக் கொண்டு உருவாக்கப்பட்டது அந்த நூல்.

இது 2005 ஆம் ஆண்டு வெளிவந்தது.

'ஸ்ட்விச் - நாசிகளின் இறுதித் தீர்வும்' என்ற பெயரிலே நூல் ஒன்று வெளிவந்தது. இப்போது நாங்கள் இதனை 'ஜெனீவாவும், சிங்கள இனவாதிகளும் தமிழர் மீதான இறுதித்தீர்ப்பும்' என்ற நிலைக்கு சிங்களத்தின் நிலைமை இட்டுச் செல்கின்றது.

இன்றைக்கு இந்தத் தீவிலே நடப்பது என்பதை உலகம் தனது இரு கண்களைத் திறந்து கொண்டு பார்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

அதேவேளை, உலகம் ஒரு படி நிலைக்கு இறங்கி, சிங்களத் தரப்பினுடைய பிடிவாதத்துக்கு இணங்கிப் போய் புலிகள் மீது இன்னொரு வகையான அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்கான ஒரு தளமாக பேச்சுக் களத்தைப் பயன்படுத்த விரும்பினால் - அதற்கு நிச்சயமாக புலிகள் ஒரு போதும் இடம் கொடுக்கமாட்டார்கள் என்பதை தமிழ் பேசும் மக்களின் மனச்சாட்சி சார்பாக உரத்துச் சொல்கின்றோம்.

# பல்கலை மாணவர் மீது படையினர் தாக்குதல்!

யாழ்ப்பாணம்—

யாழ்.பரமேஸ்வரா சந்தியில் பல்கலைக்கழக மாணவர்கள் மீது படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் மாணவர்கள் பலர் காயமடைந்தனர்.

நேற்று மாலை 6.25 மணியளவில் பரமேஸ்வரா சந்தியிலுள்ள உணவகம் ஒன்றில் மாணவர்கள் உணவருந்திக்கொண்டிருந்த வேளை - அத்துமீறி நுழைந்த படையினர் - மாணவர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இறுதியாண்டு மாணவன் கே.விஜிந்தன் (வயது 26) என்பவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும் பல மாணவர்கள் காயமடைந்து தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றதாகவும் பலர் உட்காயங்களுக்குள்ளாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

உணவருந்திக் கொண்டிருந்த இறுதியாண்டு மாணவர்களை படையினர் மிலேச்சத்தனமாகத் தாக்கிக் காயபடுத்தியுள்ளனர். இந்தச் செயலானது மாணவர்களைச் சீண்டி ஆத்திரமடைய வைத்து வன்செயல்களை உருவாக்க இராணுவம் முயல்வதை எடுத்துக்காட்டுகிறது.

இத்தகைய நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் பதற்றமான சூழலை உருவாக்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். படையினரின் திட்டமிட்ட இத்தகைய செயற்பாடுகள் யாழ். குடாநாட்டில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை முடக்குவதற்கான செயலாகவே நாம் கருதுகிறோம்.

இப்படியான சம்பவங்கள் தொடருமானால் கண்டனப் போராட்டங்களை நடத்தவேண்டிய சூழல் உருவாகுமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை விடுவிக்கக்கோரி அமைதிப்பேரணி!

யாழ்ப்பாணம்—

வெலிக்கந்த பகுதியில் ஆயுதக் குழுவினரால் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை உடனடியாக விடுவிக்கக்கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று அமைதிப் பேரணி இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து காலை 10 மணியளவில் ஆரம்பமான இந்த அமைதிப் பேரணி - கோயில் வீதி வழியாக ஐக்கிய நாடுகள் சபையின் யாழ்.வதிவிட அலுவலகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க அலுவலகம், கண்காணிப்புக்குழு அலுவலகம் ஆகியவற்றைச் சென்றடைந்தது. அங்கு யாழ்.அரசசார்பற்ற இணையத் தலைவர் மகஜர்களைக் கையளித்தார்.

தொடர்ந்து ஆஸ்பத்திரி வீதி - கண்டி வீதி ஊடாக யாழ்.செயலகத்தை பேரணி சென்றடைந்தது. அங்கு மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கான மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்த அமைதிப் பேரணியில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன் மற்றும் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய பிரதிநிதிகள், முன்பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

வழமைக்கு மாறாக வீதிகளில் பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்ததுடன், பவள் கவச வாகனம், பிக்கப் வாகனங்களில் வந்திறங்கிய படையினர் - பேரணியில் கலந்துகொண்டவர்களையும் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களையும் வீடியோ கமரா மூலம் படம் பிடித்தனர்.

(91)

# பேரணியை படம்பிடித்த செய்தியாளர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்—

வெலிகந்தவில் வைத்து கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக தொண்டர்களை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி நேற்று நடத்தப்பட்ட அமைதிப் பேரணியில் புகைப்படம் எடுத்த வலம்புரி செய்தியாளர் திலீப் இன்பன் படையினரால் தாக்கப்பட்டார்.

நல்லூரிலிருந்து புறப்பட்ட அமைதிப் பேரணி யாழ்.மாவட்ட செயலகத்தை அண்மித்துக்கொண்டிருந்த வேளை- பவள் கவச வாகனங்கள் சகிதம் வந்த படையினர் அமைதிப் பேரணியைப் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்த மேற்படி செய்தியாளரை சூழ்ந்து புகைப்படக்கருவியை பறித்தெடுக்க முயன்றதோடு, அவரை கடுமையாகத் தாக்கினர்.

இந்த நிலையில், ஏனைய ஊடகவியலாளர்களும், தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசனும் படையினருடன் கலந்துரையாடி அவர் ஊடகவியலாளர் என்பதை உறுதிப்படுத்திய பின்பே அவரை விடுதலை செய்தனர்.

இதேவேளை, யாழ். செயலகத்தில் செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளர்களையும் படையினர் மிரட்டியதாகத் தெரியவருகிறது.

அமைதிப்பேரணியை சூழ்ந்து சென்ற படையினர் ஊடகவியலாளர்களையும், பொதுமக்களையும் வீடியோப்படம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது


## நமது ஈழநாடு பத்திரிகை தமிழ் கலை, இலக்கிய ஊடக நண்பர்கள் அமைப்புடன் இணைந்து நடத்தும்

## எழுத்தாளர் செம்பியன் செல்வன் நினைவு சிறுகதைப் போட்டி

☆ சிறுகதைகள் சமகால வாழ்வியலை சித்தரிப்பவையாக அமைதல் வேண்டும்.

☆ ஏற்கனவே பிரசுரமான கதைகளாகவோ, பிரசுரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டவையாகவோ இருக்கக் கூடாது.

☆ புனைபெயரில் எழுதுபவர்கள் தங்கள் சொந்தப் பெயர், முகவரியை தெளிவாக தனியான தாளில் குறிப்பிடல் வேண்டும்.

☆ சிறுகதைகள் தாளின் ஒரு பக்கத்தில் கையெழுத்துப் பிரதியாயின் 8 பக்கங்களுக்கும், தட்டச்சு பிரதியாயின் 4 பக்கங்களுக்கும் மேற்படலாகாது.

**முதல் மூன்று இடங்களைப் பெறும் சிறுகதைகளுக்கு முறையே ரூபா 5000, 3000, 2000 பணப்பரிசில்கள் வழங்கப்படும்.**

பரிசு பெற்ற கதைகளோடு மேலும் ஐந்து சிறந்த கதைகள் நமது ஈழநாடு பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். உங்கள் சிறுகதைகள் வந்து சேரவேண்டிய இறுதி நாள் - 30.04.2006

அனுப்பவேண்டிய முகவரி:-

**எழுத்தாளர் செம்பியன் செல்வன் நினைவு சிறுகதைப் போட்டி,**
**பிரதம ஆசிரியர், நமது ஈழநாடு,**
**267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**


# புது வருஷப் பிறப்பு

## வாக்கிய பஞ்சாங்கம்

விய வருஷம் என்னும் சித்திரைப் புத்தாண்டு பார்த்திப வருடம் பங்குனி மாதம் 30 ஆம் திகதி (14-04-2006) வியாழக்கிழமை பின்னிரவு நாடி 56 வினாடி 02 (04.31 வெள்ளிக்கிழமை அதிகாலை) அபரபட்ச பிரதமை திதி சித்திரை நட்சத்திரத்தில் விய வருஷம் என்னும் புத்தாண்டு மலர்கிறது.

| | | |
|---|---|---|
| புண்ணிய காலம் :- | நள்ளிரவு 12.31 முதல் மறுநாள் காலை 8.31 வரை. | |
| கைவிசேஷம்:- | 14-04-2006 :- | காலை 08.01 - 9.52, மாலை7.27-8.13 வரை |
| | 15.04.2006 - | காலை7.50-9.00வரை |
| ஆடை விபரம் :- | மஞ்சள் நிற கரையமைந்த வெள்ளை ஆடை அல்லது வெள்ளை ஆடை அணிதல் நன்று. | |

விய வருஷம் என்னும் சித்திரைப் புத்தாண்டு பார்த்திப வருஷம் பங்குனி மாதம் 30 ஆம் திகதி (14-04-2006) வியாழக்கிழமை பின்னிரவு நாடி 56 - விநாடி 2 (4.31 வெள்ளிக்கிழமை அதிகாலை) அபரபட்ச பிரதிமையும் சித்திரை நட்சத்திரமும் கூடிய நேரத்தில் மலர்கிறது.

புண்ணியகாலம்:- நள்ளிரவு 12.31 தொடக்கம் மறுநாள் காலை 8.31 வரை.

இரகுநாதஐயர்

## திருக்கணித பஞ்சாங்கம்

14-04-2006 (சித்திரை மாதம் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.49 மணிக்கு விய என்னும் பெயருடைய புதுவருஷம் பிறக்கிறது.

| | |
|---|---|
| இலக்கினம் | - மேடம் |
| நட்சத்திரம் | - சித்திரை 4ஆம் பாதம் |
| திதி | - அபரபட்ச பிரதமை |
| புண்ணியகாலம் | - 13 ஆம் திகதி வியாழக்கிழமை பின்னிரவு மணி 2.49 தொடக்கம் வெள்ளிக்கிழமை பகல் மணி 10.49 வரை. |
| கைவிசேஷம் | - 14-04-2006 வெள்ளிக்கிழமை காலை மணி 6.54 முதல் காலை 8.10 வரை. காலை மணி 8.34 முதல் பகல் 10.10 வரை |

| | | | |
|---|---|---|---|
| புத ராகு | ல சூ | | செவ் |
| சுக் யுரே | புதுவருஷ ஜாதகம் | | சனி |
| நெப் | | | |
| | | சந் குரு | கேது |

இலங்கையின் பலாபலன்கள்:- வருஷம் பிறக்கும்போது உதய லக்கினம் மேடமாக அமைகிறது. இலக்கினத்தில் சூரியன் உச்சம் பெறுவது அரசியலில் ஸ்திரமான தன்மையை ஏற்படுத்தும். மக்களின் ஆதரவு கூடுதலாக இருக்கும். சனி லக்கினத்தை நோக்குவதால் பலவித எதிர்பார்ப்புக்களையும், சிரமங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும். இலங்கையின் சுதந்திர லக்கினமான கும்பத்துக்கு 9 இல் குருவும், 6 இல் சனியும், சஞ்சரிப்பது முன்னேற்றத்துக்கும், வலிமைக்கும் சிறந்ததாகும். அரசாங்கத்துக்கு அதிகாரத்தையும், எதிர்பார்ப்புக்களைச் சமாளிக்கின்ற ஆற்றலையும் கொடுக்கும்.

தமிழர்களுக்குரிய மேட லக்கினத்துக்கு குரு பார்வை இருப்பதும், இலக்கினாதிபதி செவ்வாய் 3ஆம் வீட்டிலிருப்பதும் நிம்மதியைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையாகும். எனினும், சனி மேட ராசியை நோக்குவதால் இடையிடையே அமைதிக் குறைவுகளையும் ஏற்படுத்தும். இந்தக் காலம் அமைதிப் பேச்சுக்கு ஒரு நல்ல வாய்ப்பான காலம் எனலாம். பொதுவாக அமைதிச் சூழ்நிலையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும்.

சி.சிதம்பரநாதக்குருக்கள்

# கண்காணிப்புகுழு தலைவர் விடுதலைப் புலிகளுடன் சந்திப்பு!

கிளிநொச்சி—

விடுதலைப்புலிகளின் கிழக்குத் தளபதிகள் வன்னிக்கு செல்வதற்கான பயண ஏற்பாடுகள் குறித்து கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப்பணிப்பாளர் புலித்தேவனைச் சந்தித்துப் பேச்சுநடத்தினார்.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள சமாதான செயலகத்தில் ஆரம்பமான இந்தச்சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் நீடித்தது.

இந்தச்சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் உல்ப் ஹென்றிக்சன் கூறியதாவது:

இந்தச் சந்திப்பு மிகவும் நல்ல முறையில் நடைபெற்றது. விடுதலைப்புலிகளின் கிழக்கு தளபதிகளின் கிளிநொச்சி பயணத்துக்கான ஏற்பாடுகள் தொடர்பாக சிறிது சமரசம் ஏற்பட்டுள்ளதாக நினைக்கிறேன்.

மேலும், ஜெனிவா பேச்சுக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் சூழ்நிலைக்கான சந்தர்ப்பங்களை விடுதலைப் புலிகள் தரப்பு குறைத்துள்ளது.

ஜெனிவாப்பேச்சு தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கு முக்கியமானது. இது தொடர்பாக தாங்கள் அவதானமாக செயற்படுவதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் இராணுவத் தளபதிகளுடன் ஆலோசனை நடத்தினோம். நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது தொடர்பாக பேச்சுக்கள் நடத்தப்பட்டது என அவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அமைச்சர் போகொல்லாகம திருகோணமலை விரைவு!

திருகோ ணமலை—

திருகோணமலையில் ஏற்பட்டிருக்கும் வன்முறைச்சம்பவங்கள் குறித்து ஆராய்வதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ரோகித போகொல்லாகம, வடமத்திய மாகாண முதலமைச்சர் பேர்டி பிறேம்லால் திஸ நாயக்க ஆகியோர் நேற்று மாலை திருகோணமலைக்கு சென்றனர்.

இவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை அவதானித்ததுடன்– பொலிஸார் மற்றும் இராணுவத்தினருடன் அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக கேட்டறிந்தனர்.

இந்த வன்முறைச் சம்பவங்களின்போது காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கும் திருகோணமலை பொது வைத்தியசாலைக்குச் சென்று அவர்களை பார்வையிட்டதுடன், அங்கு ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவும் தகவல்களைக் கேட்டறிந்தனர்.

இதேவேளை, பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ திருகோணமலைக்குச் சென்று வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது குறித்து பொலிஸ் தரப்புடன் பேச்சுக்களை நடத்தினார்.

திருகோணமலையில் ஏற்பட்டிருக்கும் வன்முறைச்சம்பவம் தொடர்பாக அமைச்சர் ரோகித போகல்லாகம மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரை சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை அவதானித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (10) (4)

## திருமலை கலவரம் - கோரக் காட்சிகள்


சடலங்கள் வைத்தியசாலைக்கு...


காயமுற்ற சிறுவன் ஒருவன்.


தாய், தந்தை, சகோதரியைப் பறிகொடுத்து நினைவிழந்த நிலையில் உள்ள குழந்தை.


காயமுற்ற இளைஞன் ஒருவன்.

## குச்சவெளியில்...

குண்டே வெடிக்கவைக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் பொலிஸ் சார்ஜன்ட் லியனகே மற்றும் கொன்ஸ்டபிள் தர்மசிறி ஆகியோர் உயிரிழந்தனர்.

மேலும், கொன்ஸ்டபிள்களான கமலசிறி, வசந்த ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

## புலிகள்...

தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக எழிலன் தெரிவித்தார்.

## சுன்னாகத்தில்...

சுன்னாகம் – மின்சார நிலைய வீதியிலுள்ள வீடொன்றுக்குள் நேற்றுக் காலை 6.15 மணியளவில் புகுந்த இனந்தெரியாத நபர்கள் வீட்டிலிருந்த மேற்படி இளைஞரை ஜன்னல் கம்பி ஊடாக சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர். இந்தச் சம்பவத்தில் அவர் அந்த இடத் திலேயே உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிபதி சரோஜினி இளங்கோவன் விசாரணைகளை மேற்கொண்டதோடு – பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டதோடு, இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் அடுத்த வாரம் நடைபெறுமெனத் தெரிவித்தார்.

இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை – நேற்றுமுன்தினம் இரவு இவரது வீட்டுக்கு இரண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற நான்கு பேர் ஓட்டோவை வாடகைக்கு அமர்த் தக் கேட்டதாகவும், அதற்கு அவர் மறுப்புத் தெரிவித்ததாகவும் குடும்பத்தினர் தெரிவித்தனர். (து)

## இலங்கை...

தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.

அத்துடன், ஜெனிவாவில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற இந்தியா அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கும் என்றும் இந்தியப் பிரதமர் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது

அதேநேரம், திருகோணமலையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து இந்திய துணைத் தூதுவரின் கவனத்துக்கு கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

## புலனாய்வு அதிகாரி...

ஹசார் அலி என்ற இராணுவச் சிப்பாயும் காயமுற்றார். இவர்கள் இருவரும் உடனடியாக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு ஆபத்தான நிலையில் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

இராணுவமுகாமுக்கு வெளியேயுள்ள வீடொன்றுக்கு சென்று கொண்டிருந்தபோதே இவர்கள் பிஸ்டலால் சுடப்பட்டதாகவும், படுகாயமடைந்த மேஜர் குமார ஆபத்தான கட்டத்தில் இருப்பதாகவும் இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

அதேவேளை, இராணுவப் புலனாய்வுத்துறை சிரேஷ்ட அதிகாரியான மேஜர் குமார இராணுவ துணை ஆயுதக்குழுக்களை இயக்கி வருபவர் என்றும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

## திருமலையில் இனக்கலவரம்...

னங்கள் எரித்து அழிக்கப்பட்டன.

1983, 1987 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் திருகோணமலை நகரில் இடம்பெற்ற மிக மோசமான தமிழருக்கெதிரான வன்முறையாக இது கருதப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருகிறது.

நேற்றுமாலை 4 மணியளவில் திருகோணமலை நகரிலுள்ள மரக்கறிச் சந்தைப் பகுதியிலுள்ள தேங்காய்க் கடைக்கு முன்பாக குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் 5 சிங்களவர்களும் கொல்லப்பட்டனர்.

இதையடுத்தே தமிழ்மக்களுக்கு எதிரான பாரிய தாக்குதல் சம்பவங்கள் சிங்களக் காடையர் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டன.

தமிழர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள், வீடுகள், வாகனங்கள் எரிக்கப்பட்டதால் – திருகோணமலை நகருக்கு மேலாக பெரும் புகை மூட்டம் காணப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மரக்கறிச் சந்தை, பஸ்நிலையப் பகுதி, மணிக்கூட்டு சந்தி, மீன் சந்தை, மத்திய வீதி, வடகரை வீதி, மடத்தடி, புகையிரதநிலையச் சந்தி, சிறிமாபுரம் போன்ற பகுதிகளி லும், லிங்கநகர், மட்கோ சந்திப் பகுதிகளிலும் தமிழர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு, வாள்வெட்டு என்பவற்றில் சிறுவர்கள், பெண்கள் உட்பட 10 இற்கும் அதிகமான தமிழர்களும் முஸ்லிம் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

குண்டுவெடிப்பு இடம்பெற முன்னரே மூன்றுக்கும் அதிக லொறிகளில் அழைத்துவரப்பட்டிருந்த சிங்களக் காடையர் கும்பல் வடகரை வீதி, மத்திய வீதிப் பகுதிகளிலுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான ஐந்திற்கும் அதிகமான பாரிய வர்த்தக நிலையங்களை கொள்ளையிட்ட பின்னர் தீவைத்து அழித்தனர்.

சித்திரை புதுவருடத்துக்காக துணிமணிகளையும், ஏனைய பொருட்களையும் கொள்வனவு செய்த பல தமிழர்கள் இந்தச் சம்பவத்தின்போது அநியாயமாக படுகொலை செய்யப்பட்டனர். நகரில் ஏற்பட்ட பதற்ற நிலைமை சுமார் மூன்று மணிநேரத்துக்கும் மேலாக நீடித்தது.

சம்பவங்கள் இடம்பெற்ற பகுதிகளில் கடற்படையினர், பொலிஸார், இராணுவத்தினர் பெருமளவில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த போதும் அவர்கள் வன்முறைகளைத் தடுக்க எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை.

இதேவேளை – அசம்பாவிதச் சம்பவங்கள் குறித்து திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் – பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் தரப்புக்கும், ஜனாதிபதிக்கும் உடனடியாக அறிவித்துள்ளார்.

தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக உள்ளூர் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் திருமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள அதேவேளை – காயமடைந்தோரில் 45 பேர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவிலும், விபத்துச் சேவை பிரிவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதைவிட சிறுகாயங்களுக்குள்ளான நூற்றுக்கு மேற்பட்டவர்கள் அச்சம் காரணமாக வைத்தியசாலைக்குச் செல்லாமல் வீடுகளிலேயே தங்கியுள்ளதாகவும் அறியவருகிறது. தமிழர்களின் வர்த்தக நிறுவனங்களுக்கு ஏற்பட்ட சொத்தழிவு சுமார் 5 கோடி ரூபாவென முதற்கட்ட மதிப்பீட்டுத் தகவல்கள் தெரிவித்தன.

வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றவேளை சிதறி ஓடியவர்களில் 10 இற்கும் அதிகமான தமிழர்களை இன்னும் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, பெருமளவான தமிழ்மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி பொது இடங்களிலும், ஆலயங்களிலும் தங்கியுள்ளனர். (10)

# இணக்கப்பாட்டை அமுல்படுத்த கோருகிறது அமெரிக்கா!

கொழும்பு—

ஜெனிவாவில் முதலாம் கட்ட பேச்சுவார்த்தையின்போது ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டை அரசும், விடுதலைப் புலிகளும் நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படி இரு தரப்பினரிடமும் அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, வடக்கு–கிழக்கு பகுதிகளில் கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் கிளைமோர் தாக்குதல்களையும், திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டதையும் அமெரிக்கா வன்மையாக கண்டிப்பதுடன் சம்பவங்களில் உயிரிழந்தவர்களுக்குத் தமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதாக அமெரிக்க தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்நிறுத்த அமுலாக்கல் தொடர்பான பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு ஜனநாயக ரீதியிலான அரசியல் தீர்வுகாண முன்வரவேண்டுமென அமெரிக்கா விடுதலைப்புலிகளை கேட்டுக்கொண்டுள்ளதாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு–கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குண்டுவெடிப்புச் சம்பவங்களை ஜப்பான் அரசாங்கமும், ஐரோப்பிய ஒன்றியமும் வன்மையாக கண்டிப்பதாக அறிக்கை வெளியிட்டுள்ளன.

வடக்கு–கிழக்கு பகுதிகளில் படையினர் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த கிளைமோர் குண்டு வெடிப்புகள் தொடர்பாக கவனம் செலுத்தி வருவதாகவும், இந்தச்சம்பவங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராய்ந்து வருவதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## ஊர்காவற்துறை...

ஊர்காவற்துறை – பருத்தியடைப்பைச் சேர்ந்த எஸ்.கோபால் (வயது 26) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது –

தனியான ஒரு வீட்டிலேயே இரவில் தங்கும் மேற்படி இளைஞர், சம்பவம் நடைபெற்ற இரவு வழமை போல் குறித்த வீட்டுக்குச் சென்றவர் மறுநாள் காலை 9 மணியாகியும் வீட்டுக்குத் திரும்பாததால் தாயார் தேடிச் சென்றபோது இரு கைகளும் கட்டப்பட்ட நிலையில் பலத்த வெட்டுக் காயங்களுடன் மேற்படி வீட்டில் சடலமாகக் கிடந்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்துறை பொலிஸாரிடம் கேட்ட போது –

இந்தக் கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனத் தெரிவித்தனர்.

சடலம் பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## 2 இளைஞர்கள்...

இந்த இளைஞர்கள் இருவரும் 19 அல்லது 20 வயது மதிக்கத்தக்கவர்கள் என்றும் இருவரையும் ஆயுததாரிகளே கடத்திச்சென்று கொலை செய்ததாக தெரியவருகிறது.

இவர்கள் யார் என்று இதுவரை இனங்காணப்படவில்லை. 48 மணிநேரத்துக்குள் இந்தப் பகுதியில் 3 இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

உங்கள் அபிமான
நமது ஈழநாடு வாரமலர்
எதிர்வரும் 15 ஆம் திகதி முதல்
சனிக்கிழமை தோறும்
அதிகபக்கங்கள்! அதே விலையில்!!

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.